சத்திய வேத

# பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. | 1876,ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது | Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

82-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1957-ம் ஆண்டு சித்திரை மாதம் 25-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 15-ம் இலக்கம்

# தொழில் உலகின் தீபமும், காவலரும் தேவதிருக் கைத்தாதை

— பரிமேலர் எஸ். அருளானந்தம் —

தற்காலஉலகத்தைத் தொழில் உலகமெனக் கூறுவார்கள். வேண்டுமென்றலுஞ்சரி, வேண்டாமென்றலுஞ்சரி, தொழிலானது மேம்பாடுடையதென உலகம் ஏற்றுக் கொள்ளுங் காலம் இது. பூமியிலே நூற்றுக்குத் 99 வீதமானபேர் தொழிலாளர்களே. ஆகவே, தொழில்உலகத்துக்குப் பாதுகாவலரும், மகாஉந்நத முன்மாதிரிகையுமான எமது ஆசை நேச அப்பரை— தேவ கைத்தாதையாம் சூசையப்பரைச் சிந்தித்துச் சிறிதுவரைய ஆசிக்கின்ருேம்.

தொழிலாளனின் பதவியை உந்நதங்கட்கு உயர்த்தி வைத்தவர் எம் திருமீட்பரே. அவர் ஒருபாரிய வர்த்தகனுகவோ, அல்லது மாபெருஞ் சேனுசமுத்திரத்தின் தளபதியாகவோ, அன்றேல் புகழோங்கும் ஓர் மந்திரி பிரதானியாகவோ, வேண்டுமானுல் உலகமுழுவதையுமே ஒரு குடையின்கீழ் கட்டியாளும் ஏக சக்கிரவர்த்தியாகவோ வந்துதித்திருக்கலாம். ஆனுல், அப்பதவிகள்யாவையும் அவர் உதறித்தள்ளிவிட்டு, நெற்றிவியர்வை நிலத்திற்சிந்தக் கஷ்டமானதொழில்புரிந்து தங்கள் சீவனத்துக்காக உழைக்கும் தொண்டர்களின் கூட்டத்திலேயே தாமும் ஒருவராகச் சேர்ந்துகொண்டார். அதில்சேருமுன் கன்னிமைகுன்ருது தம்மைப் பெற்றெடுக்கவிருந்த திருத்தாயாரையும், தம்மை ஆதரித்துப் பாதுகாத்து வளர்க்கவிருந்த கைத்தாதையரையும்தொழிலாளராகவே ஆக்கிவிட்டார். என்ன முகாந்திரங்கட்காக இப்படிச் செய்யச் சித்தங் கொண்டாரென்பதை ஆராய்தல் தகும். தேவாதி தேவனுன யேசு இரட்சகரும், மன்னன் தவிதுகுல மகாராச பொன்மரபில் வந்துதித்த கன்னிமரியம்மாளும், சூசை மாதவரும், தச்சுத்தொழிலேயே சீவியத்தை நடாத்தும் தொழிலாகத் தெரிந்து கொண்டார்கள். அதனுல் தொழில் உலகம் அடைந்த மகிமைக்கோ எல்லை பிரமாணம் இல்லை. தேவ தாயாரும், சூசையப்பரும் தரித்திரத்தையே தங்கள் திரவியமாகத் தெரிந்து கொண்டமையானது, பின்னர் உதிக்கப்போகும் திருமீட்பரின் இரட்சணிய திட்டத்திற்குப் பொட்டிட்டாற்போல் பொருத்தமானதாயிற்று.

எப்படியெனில், மானிடனை ஈடேற்றவந்த பரமஇரட்சகர் அவனில் எப்போதுமேயுள்ள பாவநாட்டத்தை வேரோடறுப்பதற்குத் தகுந்த வழி காட்டவேண்டியவரானுர். நரக பாதையிலே மனிதனை விழுத்தி, அவனைத் தீநரகுக் காளாக்கும் பிரதான பிணிகள் மூன்று. அவையாவன: அகங்காரம், இன்பசுகநாட்டம், பொருள்வாஞ்சை. இந்தநோய்களைக் கொல்ல அவர்தந்திருக்கும் மாமூலிகள்மூன்று. அவையாவன: தாழ்மை, தூய்மை, தரித்திரம். இவைகளை அவனுக்குத்தெளிவாகக்கற்பிக்கவே தேவன் ஓர்தொழிலாளியாய், முப்பதுவருடகாலம் தொண்டாற்றினுர். தமதுநேசமாதாவையும், கைத்தாதையையும் ஏலவேதானே தொழிலாளிகளாக்கிவிட்டார். தொழிலின் மேன்மையும், சிரியதொண்டினுல் மனிதன் தனது நித்தியசீவியத்துக்குத் தேடக்கூடிய அழியாத்திரவியங்களையும்பற்றி அவனுக்குப்படிப்பிக்க ஒரு சர்வகலாசாலையையும் சின்னநசரேத்தெனும் கிராமத்திலே ஸ்தாபித்துவிட்டார். அதற்குத் தமது கைத்தாதையை அதிபராக்கிவிட்டார். அதற்குநிகரான ஒருசர்வகலாசாலை உலகில்அதற்குமுன் இருந்ததுமில்லை. இனிமேல் இருக்கப்போவதுமில்லை. யுகமுடியுங் காலமட்டும் கன்னிமாதாவும், சூசைமாதவரும் மலைமேற்தீபங்கள்போல் அதில் நின்று இலங்குவார்கள். தலைவராகியசூசைமாதவர் அதில் திருமீட்பர் தமக்குக்கற்றுக்கொடுத்த யாவையும் என்றுமே மனுக்குலத்துக்குப் பிரதிபிம்பிக்கும் கண்ணுடியாக விளங்குவார்.




சஞ்சூசைமுனிவர் பிதாப்பிதாக்களுக்குத் தலைமையானவர். தேவதாயாரின் விரத்தபத்தா. தேவ கைத்தாதை. ஞானமானவரை நடப்பித்தவர். பரதேசியானதேவனைப் பராமரித்தவர். தொழிலாளிகளின்மங்காத அலங்கிர்தகிரீடம். தொழிலாளராகியஎங்கட்கு அவர்கூறியவைகளில் ஒன்றிரண்டை இதன்கீழ் குறிப்பதுதகும். அவர்சொல்வது:

(1) மக்காள்! தற்கால உலகம் தேவனைமறந்து, அகங்காரமெனும் பித்தலாட்டத்தினுல் பீடிக்கப்பட்டு, பயங்கரத்துக்குரிய அபாயகரமான நிலைமையிலே இருக்கின்றது.

நாஸ்திகம், கொலை, களவு, காமம், குரோதம். பகை, அடிமையாட்சி முதலியவைகளால் **பொதுஉடைமை** என்னும் சாத்தான் பூதலத்தைக் கலக்கி மனிதரைஆட்சிகொள்ளக் கங்கணங்கட்டிநிற்கின்ருன். ஒரு மரத்தை அதன்கனிகளால் அறியலாம். பொதுஉடைமை பரவியிருக்கும் நாடுகளிலெல்லாம் சமாதானம் உருக்குலைந்து, பகைஎனும்நெருப்புப் பரவிவருகின்றது. "சமத்துவம், சமத்துவம்" என்றுசொல்லி, மனிதனின் சுயாதீனத்தைப்பறித்து, அவனை மிருகங்களைப்போல அடிமையாட்சிக்குள் ஆழ்த்திவிடுவான் சாத்தான்.

**(2) சமத்துவத்தையல்ல, சகோதரத்துவத்தையே** நிலைநாட்டுங்கள். எல்லோரும் எல்லாக்காரியங்களிலும் சமமா? இல்லை. மனிதனுக்குத் தேவனுல்அருளப்பட்ட சுயம்பான, இயல்பான உரிமைகளிலும், அவனுடைய ஈருந்தகதியைச்சேர்ந்த காரியங்களிலுமே எல்லோருஞ் சமம். மற்றும்விஷயங்களில் சமத்துவத்தைப் பாராட்டில், சுதந்திர உலகம் நிலைநிற்காது. ஒருகுடும்பத்தில் பிதா, மாதா, பிள்ளைகள் உண்டு. அதிலே யாவரும் சமமாயிருக்கமுடிமா? இல்லை. அதிலே நிலவவேண்டியது கடவுட்பத்தி, அன்பு, அனுதாபம், அடக்கம், கீழ்ப்படிதல், ஒற்றுமை, சகோதரத்துவம். கிறீஸ்து தேவஇராசா உலகத்தில்நடமாடியபோது **சமத்துவத்தைப்** போதிக்கவில்லை. அகிலாண்ட கோடிகள் அனைத்தையும் படைத்தவர் தொழிலாளனுகக் கைநீட்டிக் கூலிபெற்ருர்.

(3) தொழிலாளர்பதவி ஒரு பெரும்பதவி. எத்தொழிலும் மேன்மையுடையதே. தொண்டாற்றிக் கிடப்பதே எனதுகடனென்று ஒழுகாதஅரசன் — அவன்பதர்! பதர்!! பதர்!!! சிரியதொண்டே எனது இலட்சியமென்று சேவைபுரியும் தெருக்கூட்டுவோன் — அவன் மாந்தருள்மகிபன்.

(4) ஒன்றுக்குமே வாதாடப்படாதென்று நாம்சொல்வதேயில்லை. தேவன் உங்கட்கு அளித்திருக்கும் உரிமைகளையும், சுதந்திரங்களையும் காப்பாற்ற நீங்கள் வாதாடவே வேண்டும்.

(5) ஈற்றில் எவரையுமே பகைக்க வேண்டாம். முதலாளிவர்க்கத்தினரை— ஐசுவரியவான்களைப் பகைக்க வேண்டாம். பொதுவாக உங்களிடம்விளங்கும் சாந்தி, சமாதானம், நித்திரை, ப்சி, சுகம் அவர்கட்கு இல்லை. மெய்யானபாக்கியம் வயிற்றை நிரப்புவதில்அல்ல. அது தேவனைத்தொழுது, தொண்டாற்றுவதிலேயே அமைந்துள்ளது. இன்றைக்குச்செல்வன், நாளைக்கு யாசகன். "உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா." ஆகவே, ஒருபோதுமே அழியாத முழுமுதலை என்றும் தேடுவாயாக, சாந்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாம் திருவுளம்பற்றிய படியே உயிர்த்தெழுந்தார்

( ஜி. எஸ். நாயகம், ஸ்றேஷன்மாஸ்றர், கெமுபு — மலாயா )

சர்வேசுரான் திருவுளங்கனிந்து மனிதருக்குக்கொடுக்கும் தலைசிறந்த கொடைகளுள் "ஞான"மும் ஒன்று. ஞானம் இருவகைப்படும். ஒன்று, "தேவஞானம்". இது பரலோகத்துடன் சம்பந்தப்பட்டது. ஆகவே, இது மகாஉந்நதமானது மற்றொன்று, "உலகஞானம்". இது பூலோகத்துடன் சமபந்தப்பட்டது. அதனால், தேவஞானம் ஆத்துமத்தோடும், உலகஞானம சரீரத்தோடும் சம்பந்தப்பட்டன எனலாம். சுருங்கச் சொலலுமிடத்து, தேவஞானம் மறுவுலகவாழ்வோடும், உலகஞானம் இவ்வுலகவாழ்வோடும் சமபந்தப்பட்டனவென்று கூறலாம். இருவகைஞானமும மகா வல்லமையுடையனவாயினும் தேவஞானத்தின் வல்லமைக்கு முன்பாக உலகஞானத்தின்வல்லமை ஒன்றுமில்லாததுபோலாகும்.

இன்றையஉலகம் விஞ்ஞானத்தில் தீவிர முன்னேற்றமடைந்து முன்னணியில்நிற்கின்றது. எவருமே திகைத்து மலைக்கக்கூடியவிதமாக ஏதேதோவெல்லாம் விசித்திரமான காரியங்களைத் தனது விஞ்ஞான சக்தியைக்கொணடு மனிதன் கணடுபிடித்திருக்கிறான். இன்னும் கணடுபிடித்துவருகிறான். தனது ஆராய்ச்சிமூலம ஆகாயத்திலும் அத்திவாரமிட்டுக் கோட்டைகொத்தளங்கள் எழுப்பவும் ஆயத்தப்படுகிறான். இன்னும ஒருகால் நூற்றாண்டில் சந்திரமணடலத்துக்கும், செவ்வாய்க்கிரகத்துக்கும் சென்றுவர முயற்சிக்கின்றான். ஆனால், என்னென்ன நவீனங்களைத்தான் அவன் கணடுபிடித்தபோதிலும் இரண்டேயிரண்டு காரியங்களைமாத்திரம் அவனால் எக்காலத்திலும் சாதிக்கமுடியாதென்பது வெள்ளிடைமலை. அவைகளில் (1) இறந்தஒருவரை உயிர்ப்பித்தல். (2) இறந்தவரே தனதுவல்லமையைக்கொண்டு மீண்டும் உயிர்த்தெழுதல்.

இவற்றுள் மரித்தஒருவரை உயிர்ப்பிக்கும்வல்லபம தேவஞானமபடைத்த பரிசுத்தவாளருக்குச் சர்வேசுரானால் உரிமையாக அருளப்பட்டுள்ள ஓர்உந்நதவரமாகும் (மத் 10 : 8). இந்த வரத்தைக்கொண்டு அப்போஸ்தலர்களும், திருச்சபையில்விளங்கிய அர்ச்சியசிட்டர்கள்பலரும் மரித்தவர்களை உயிர்ப்பித்தார்கள். இத்தகைய மகத்தான அற்புதம மற்றெந்த மதத்திலும் நிகழ்ந்ததாக நாம இன்னும் அறிந்ததில்லை. அவர்கள் இறந்துபட்டவர்களை உயிர்ப்பித்தபோதிலும் தான் மரித்தபின் தன்னைத்தானே உயிர்ப்பித்த — அதாவது தானாகவே உயிர்த்தெழுந்த ஓர்அர்ச்சியசிட்டர் என்றுமே இருந்ததுமில்லை. இருக்கப்போவதுமில்லை. ஏனெனில், இந்த மகாஉந்நத தனிவல்லமை எல்லாம்வல்ல கடவுள் ஒருவருக்கேயுள்ள ஓர்தனிச்சுதந்திரமாகும். கிறீஸ்துநாதர் தேவனும், மனிதனும் ஒன்றாகியகடவுள். அவரில் தேவசுபாவமும், மனிதசுபாவமும் ஒன்றித்துள்ளன. அவர் தேவசுபாவத்தின் கலப்பின்றி முற்றும் மனிதசுபாவத்திலேயே பாடுபட்டார். ஆனால், அவர் முற்றும்தேவசுபாவத்திலேயே உயிர்த்தெழுந்தார். தேவசுபாவத்தில் பாடுபடமுடியாது. மனித சுபாவத்தில் உயிர்த்தெழ முடியாது. ஆகவே, கிறீஸ்துநாதரின் தெய்வத்துவத்தை முத்திரையிட்டு உண்மைப்படுத்திய அற்புதத்தில் மகாஅற்புதம் இதுதான். எமது விசுவாசத்தின் அஸ்திவாரமாயிருப்பதும் இந்தச்சத்தியந்தான். அதனால், இச்சத்தியத்தின் உண்மையைச் சிறுக ஆராய்ந்துபார்ப்போம்.

ஒருமுறை பரிசேயரும், சதுசேயரும் கிறீஸ்துநாதரைச் சோதிக்கும்படி அவரண்டைசென்று, வானத்தினின்று ஓர் அடையாளத்தைத் தங்களுக்குக் காணபிக்கும்படி அவரை மன்றாடினார்கள். அதற்கு அவர் மறுமொழியாக அவர்களைநோக்கி: "யோனாஸ் தீர்க்கதரிசியின் அடையாளந்தவிர வேறு அடையாளம் இதற்குச் கொடுக்கப்படமாட்டாது" (மத். 16 : 4). அதாவது, "யோனாஸென்பவர் மூன்றுபகலும், மூன்றுஇரவும் திமிங்கிலத்தின் வயிற்றினுள் இருந்ததுபோல, மனுமகனும் மூன்றுபகலும் மூன்றுஇரவும் பூமியின்உள்ளத்துள் இருப்பார்" (மத். 12 : 40) என்றார். மற்றோர் முறை தேவாலயத்தை அநாசாரப்படுத்திய வியாபாரிகளை அவர் துரத்தியதைக் கண்ட யூதர்கள் அவரைப்பார்த்து: "நீர் இவைகளைச் செய்கிறீரே, இதற்கு என்ன அடையாளத்தை எங்களுக்குக் காணபிக்கிறீர்?" என்று கேட்டார்கள். அதற்கு யேசுநாதர் பிரத்தியுத்தாரமாக: "இத்தேவாலயத்தை இடித்துப்போடுங்கள். நான் இதை மூன்றுதினத்துக்குள் திரும்பவும்எழுப்புவேன்" (அரு. 2 : 18–19) என்று தமதுசரீரமாகிய ஆலயத்தைக் குறித்துச் சொன்னார். தம்முடைய சீஷர்களுக்கு ஏற்கனவே தமது திருப்பாடுகளையும், சிலுவைமரணத்தையும், மகிமையான உத்தானத்தையும் பற்றி அழுத்தம்திருத்தமாய்க் கூறியிருந்தார் (மாற்கு 10 : 33-34). இவை நிகழாதிருக்கும்படி தமக்கு முட்டுக்கட்டையாயிருந்த இராயப்பர் சாத்தான்பட்டமும் கேட்டார் (மத். 16 : 23). இன்னோர்தடவை யூதர்களை நோக்கி: "என்னிடத்திலிருந்து என் சீவனைப் பறிக்க எவனாலும் முடியாது. ஆனால், நானாக அதைக்கொடுக்கிறேன். அதைக் கொடுக்கவும், மறுபடி அதைக் கைக்கொள்ளவும் எனக்கு வல்லபமுண்டு" (அரு. 10 : 18) என்றார். தீர்க்கதரிசனவாக்கியமாய் அவர்சொல்லியதெல்லாம் ஓர்எழுத்தும், ஓர்புள்ளியுந்தவறாது நூற்றுக்கு நூறுவிகிதம் சம்பூரணமாய் நிறைவேறிற்று. பெரியவியாழக்கிழமை அஸ்தமனவேளையிலிருந்து பெரியவெள்ளிக்கிழமை அஸ்தமனவேளைவரையிலே அவரின் திருப்பாடுகள்எல்லாம் நிறைவேறி, அடக்கமும் முடிந்துவிட்டது. சனத்திரளும் கலைந்துவிட்டது.

அங்ஙனமாக, பிரதான ஆசாரியருக்கும், பரிசேயருக்கும் திடீரென ஓர் எண்ணம் வந்தது. உடனே பிலாத்துவினிடம் ஓடிப்போய்: "ஆண்டவனே! அந்தவஞ்சகன் உயிரோடிருக்கையில் மூன்றுநாளைக்குப்பின் உயிர்ப்பேன்என்று சொன்னது எங்கள் ஞாபகத்தில் இருக்கிறது. ஆகையால், ஒருவேளை அவனுடைய சீஷர்கள்வந்து அவனைக் களவாய்க் கொணடுபோய், மரித்தோரிலிருந்து உயிர்த்தானென்று சனங்களுக்குச் சொல்லாதபடி மூன்று நாள்மட்டும் கல்லறையைக் காவல் பண்ணக் கட்டளையிடும்" என்று கேட்டு, இந்த உத்தாரவைப் பெற்றுக் கொணடுபோய்க் கல்லறையின்மேல் முத்திரையிட்டு, காவற்சேவகரைவைத்துக் கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள் (மத். 27 : 62–66). கல்லறையைக் காவல்பண்ணிய போர்ச்சேவகரோ சரியான ஆசாமிகள். நல்லது, இதுமட்டும் மனிதன் தனது வல்லமையைக்காட்டி முடித்துப்போட்டான், இனி, சர்வேசுரன் தமது வல்லமையைக் காட்டுமநேரம் இதோ அணமித்துவிட்டது!

ஆதிவாரம் (ஞாயிறு) காலைநேரம். இன்னும இருட்டாயிருக்கும்போது கல்லறைக் காவலெல்லாம் சொன்ன முறையில் பந்தோபஸ்தாயிருக்க—கல்லறையில் பதித்தமுத்திரை அந்தப்படியேயிருக்க, திவ்வியகர்த்தர் இதோ ஜெயவிருதுடன் ஒட்டோலகராய் உயிர்த்தெழுந்தருளினார். பதித்தமுத்திரை பதித்தவண்ணமிருக்க இப்பொழுது கல்லறை வெறுமகல்லறை. ஏனெனில், அங்கே இப்பொழுது அவருடைய திருமேனிஇல்லை. அவர் உயிர்த்து, கலிலேயாவுக்குப் போய்விட்டார். "ஓய்வுநாள் முடிவாகி வாரத்தின் முதல்நாள் விடியற்காலமாகையில் மரியமதலேனம்மாளும், மற்றொருமரியம்மாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள். அப்பொழுது இதோ ஓர்பெரியபூகம்பம் உணடாயிற்று. எவ்வாறெனில், ஆண்டவருடையதூதன் வானத்தினின்று இறங்கிவந்து கல்லைப்புரட்டி அதன்மேல் உட்கார்ந்தார். அவருடையரூபம் மின்னலைப்போலவும், அவருடைய உடை வெண்பனியைப்போலவும் இருந்தது. காவற்சேவகரோ அவரைக்கண்ட பயங்கரத்தால் திடுக்கிட்டுச் செத்தவர்களைப்போலானார்கள். அப்பொழுது தேவதூதன் அந்தஸ்திரிகளைப்பார்த்து: நீங்கள் பயப்படவேண்டாம்; சிலுவையில்அறையுண்ட யேசுநாதரைத் தேடுகிறீர்களென்று அறிவேன்; அவர் இங்கே இல்லை; ஏனெனில், தாம் **திருவுளம்பற்றியபடியே உயிர்த்தெழுந்தார்**; ஆண்டவரை வைத்த இடத்தை இதோ வந்துபாருங்கள்; நீங்கள் தீவிரமாய்ப்போய் அவர் உயிர்த்தெழுந்தாரென்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள்; இதோ உங்களுக்குமுன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள்" (மத். 28 : 1–7) என்றார்.

# மாதோட்டத் தபால்

— நாட்டுத்தூதன் —

ஐயா! ஓர்நாள் வயிறாரஉண்டுவிட்டு ஒருஅடிதானும் எடுத்துவைத்து நடக்கமுடியாதிருந்த ஆட்டுக்குட்டி ஒன்றைப் பிடித்துத்தின்ன ஆசைகொண்ட குள்ளநரிஒன்று அதன்பால் அணுகி "கிங்கிணி, கிணிகிணி, ஆட்டுக்குட்டி, இங்குஎன்னசெய்கிறாய் ஆட்டுக்குட்டி?" என்று மிகுந்ததாற்பரியத்துடன் கேட்டதாம். அதற்கு ஆட்டுக்குட்டிசமயோசிதமாக "நானும் நான்குநரிகளைஉண்டு நடக்கமாட்டாமல்நிற்கும் நரிதான்" என்று இறுமாப்புடன் விடைஇறுத்ததாம். உடனே குள்ளநரி தனக்குஆபத்து வந்துவிட்டதெனநினைந்து நின்றவிடமும்தெரியாது நடைகட்டியதாம். இவ்விதமே சில சுயநலப்புலிகளான தந்திரிகள் ஏழைகளைநெருங்கிப் பணம்பறிக்கமுயன்றும் இயலாதபோது அயலவராக்கும்தெரியாது அகன்றுபோகின்றனராம். எப்போதும் எல்லாரிடத்திலும் தட்டிச் சுத்திச் சம்பாதிக்கமுபலும இந்தத்தந்திரிகள்பாடும் குள்ளநரியின்பாடுதானும்.

**கட்டுக்கரைக்குளத்தின் முறையீடு:** அருமையான மாதோட்டமக்களே! உங்கள்நாட்டை வளபடுத்திச் செந்நெல் களஞ்சியமாக்கிச் சாதிசமயபேதம்பாராது உங்கள்அனைவரையும் எனது செல்வப்பிள்ளைகளாக வாழவழிபண்ணியதுயார்? இன்னும் மழைநிழல்பாகமாகிய இப்பகுதியை வாட்சியடையவிடாது, தாய்சேயைப் பாலூட்டிவளர்ப்பதுபோல் குளிர்புனலைஊட்டி வளர்த்தது யார்?

இன்னுங்கேளுங்கள்! நான் இன்றுநேற்று உங்கள்மத்தியில் தோன்றியவன்அல்ல. ஸ்ரீலங்காவின் பழம்பெரும் தடாகங்களில் நானும்ஒருவனென்பதை நீங்கள் அறியீர்களா? எனக்குப் பிற்பட்ட எத்தனையோதடாகங்கள் இப்போது திருத்தமடைந்துபுத்துயிர்பெற்றுச் சிறப்புற்றுமிளிரும் நிலையை நீங்கள் கண்டுங்கேட்டும் அறியவில்லையா? அன்றேல பத்திரிகைகள்மூலம் படித்தறியவில்லையா? எனதுபழமையும், பருமனுங்காரணமாக அல்லவா என்னை இராட்சத குளமென இன்றும் மக்கள் அழைக்கின்றார்கள்.

இன்னுங்கேளுங்கள்! நான் இந்தத் தமிழ்நாட்டில்இல்லாது ஓர்சிங்களப் பிரதேசத்தில் தோன்றியிருப்பேனாகில் இன்று என்நிலைமை யாதாயிருக்கும்? அதனை உங்களால் மதிக்கவும்முடியுமா? எனக்குப்பின் தோன்றிய எத்தனையோ சிங்களநாட்டுக் குளங்களின் இன்றைய நிலையைக் காண என்மனம் பொறுக்குதில்லையே. என்செய்வேன்? இந்தத் தமிழ்நாட்டில் தோன்றிய என்பாடும் தமிழ்மொழியின் பாடாகவே இருக்கின்றதே.

இவ்விதம் எனதுதாழ்ந்தநிலையைக் கணடுகொண்டும் நீங்கள்பாராகண்டிதமாக இருப்பது நீதியாகுமா? "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்பார்களே. உங்களுக்குநான் உப்பாய்மட்டுமல்ல, உப்போடுகூடிய முப்பத்திரண்டாயும் இருந்துவந்தேனே. அம்மட்டா! எனக்கு மேற்பரப்பிலே பழைய குளங்களைத் திருத்தியும், புதியகுளங்களை வெட்டியும் குடியேற்றிவருவதால் என்னைநோக்கிவருபநீரை இடையிலே மறித்துக்கட்டி அபகரித்துவருகிறார்களே! இதையிட்டு உங்களில் எவராவது கண்டிப்பானநடவடிக்கை எடுத்ததுண்டா? இதனாலன்றோ பெரும்பாலும் உங்கள்வேளாண்மை அடுத்தடுத்து கற்பலன்தாரமற்போகின்றது. உங்கள்இருதயம் போன்றஎன்னை நீங்கள் எவ்வளவுக்குப் புறக்கணிக்கிறீர்களோ அவ்வளவுக்கு நீங்கள் பஞ்சத்தில் அகப்படுவீர்களென்பதை ஓர்போதும்மறக்கவேண்டாம். இன்னும் என் அகத்திலுள்ளநீரைக் கண்காணிப்பதிலே எத்தனையோஉத்தியோகஸ்தர்கள் தொண்டாற்றி வேதனம்பெற்று வாழ்கின்றனரே. நான் அழிந்தொழிந்தால் இவர்கள்கதி என்னவாகுமென்று நீங்களே சிந்தித்துப்பாருங்கள்.

ஆகையால், அன்பானஉழவர்களே! பெருமக்களும், கல்விமான்களும்வந்து கைகொடுத்து என்னைத்திருத்தி வைப்பார்களென்று நீங்கள் கனவிலும்காத்திராது நீங்களே ஒன்றுபட்டெழுந்து அரசினரிடம் அபயமிட்டு என்னைத் திருத்தும்விஷயத்தையும் "மல்வத்தை ஓயாத் திட்ட"த்தையும் கவனியுங்கள். அப்போதே நானும்முன்னேறுவேன்; நீங்களும்முன்னேறுவீர்கள். எனது செழிப்பு உங்கள்கையிலும், உங்கள் செழிப்பு என்கையிலும் உள்ளனஎன்பதை உள்ளளவும் மறவாதீர்கள்.

---

● லூர்துபதியில் தேவதாயார் காட்சியளித்த நூறாம் ஆண்டுவிழாவைக் கொண்டாடுதற்கான ஒழுங்குகளை இணையொத்துச்செய்யுமாறு றோமாபுரியிலே சர்வதேசகம்மிற்றிஒன்றுநிறுவப்பட்டிருக்கிறது. கருதினால்மார் திருச்சங்க தலைவரான கருதினால் திசறான், பரீஸ்நகர் அதிமேற்றிராணியாரான கருதினால் பெல்தின், தார்ப்ஸ்—லூர்து மேற்றிராணியாரான தியாஸ் எனும்மூவருமே இந்தக்கம்மிற்றிக்குத் தலைமையானவர்கள்.

● புதியபோலிஷ் பாராளுமன்றத்திலே கத்தோலிக்கநலன்களைக் கவனிப்பதற்கென்று கட்சிப்பற்றில்லாது தெரியப்பெற்ற பன்னிருகத்தோலிக்க பிரதிநிதிகளில்ஒருவரான திரு. ஜெர்ஸி சவியெய்ஸ்கி அவர்கள் போலிஷ் அரசாங்கசபை அங்கத்தவர்களில் ஒருவராகத்தெரியப்பெற்றிருக்கின்றார். அரசாங்க கூட்டுத்தலைமைச் சபையாகிய இது பாராளுமன்றத்தால் தெரியப்பெற்ற 15 அங்கத்தவர்களைக் கொண்டதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லூர்துதிருப்பதி நூற்றூண்டுவிழா

பரிசுத்த தேவதாயார் அர்ச். பெர்னதேத் அம்மாளுக்குக் காட்சிகள்அருளிய நூறும் ஆண்டாகிய வருகிற 1958-ம் ஆண்டிலே நான்கு ஐரோப்பிய நகரங்களிலிருந்து சுமார் 35,000 நோயாளர்களை நேரே லூர்துபதிக்குக் கொண்டுசெல்வதில் 'அம்புலன்ஸ்' விமானங்கள் துணைச் செய்யவிருக்கின்றன. பல்வேறு திருத்தங்கள் பெற்றுப் புதிய கோலமாகக் காட்சியளிக்கவிருக்கின்ற அத்திருப்பதியைப் பத்து லட்சம் யாத்திரிகர்கள் தரிசிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது கேவ்நதியின் போக்குத் திருப்பப்பட்டுத் திருக்கெபியின்விசாலம் பெரிதாயிருக்கும். புதிய ஆஸ்பத்திரிஒன்றும், பாப்பரசரால் வழங்கப்பெற்ற அழகான பலிபீடம் ஒன்றும் இருந்துவரும். எல்லாவற்றுள்ளும் மாபெருங் கவர்ச்சிக்குரியதாய் விளங்கப்போவது, வாதுமைப்பழவடிவமாய் நிலத்தின்கீழ் அமைக்கப்பட்டுவரும் பிரமாண்டமான மகாதேவாலயமாகும். அர்ச். 10-ம் பத்திநாதர் பேரால் அர்ப்பணஞ் செய்யப்படவிருக்கும் இந்தஆலயம் 20,000மக்களை அடக்கத்தக்கதாய், அதனுல் திவ்வியசற்பிரசாத சுற்றுப்பிரகாரத்தை நடத்தக்கூடியதாயும், மழை நாட்களிலே நோயாளர்களை ஆசிர்வதிக்கக் கூடியதாயுமிருக்கும். இந்த நூற்றூண்டுவிழாவை முன்னிட்டு ஓர் யூபிலிவருடம் பிரகடனஞ் செய்யப்படுமென நம்பப்படுவதாகத் தார்ப்ஸ் - லூர்து மேற்றிராணியாரான தியாஸ் ஆண்டவர்தெரிவித்திருக்கின்றூர். அவ்வருடத்தில் பரிசுத்த பாப்பரசர் லூர்துபதியை நேர்முகமாகத் தரிசிப்பாரென்பது நடக்கக்கூடிய ஓர்சம்பவமென்றுதானும் ரோமாபுரியிற் பேசிக்கொள்ளப்படுகிறது.

## லத்தறன் உடன்படிக்கை

இத்தாலியஅரசாங்கம் பாப்பரசின்நாடுகளை அபகரித்துக்கொண்டபோது அதற்கும், பரிசுத்த ஸ்தானத்துக்குமிடையே ஆரம்பமாகி 59வருடங்களாக நிலைத்திருந்த சமாதானபங்கத்தை ஓர் முடிவுக்குக்கொணர்ந்த லத்தறன்உடன்படிக்கையின் 28-வது வருடவிழா அன்றுஞாயிற்றுக்கிழமை வந்தபோது, இத்தாலிய கொடிகளும், பாப்பரசின்கொடிகளும் அரசாங்ககட்டடங்களிலும், மேலதிப்பிரதேசங்களிலுள்ள வத்திக்கான் கட்டடங்களிலும் பறந்துகொண்டிருந்தன. பஸ்களும், திரும்களும் அலங்கரிக்கப்பெற்று இத்தாலி முழுவதுமே ஓடிக்கொண்டிருந்தன. பிரதான நகரங்களிலே நடைபெற்றகூட்டங்களில் பரிசுத்தஸ்தானத்துக்கும், இத்தாலிக்குமிடையே மீளவும்ஏற்பட்ட இணக்கத்தைப் பற்றி அரசாங்க மந்திரிமார்உட்படப்பலபிரமுகர்களாலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

## ஒருகோடி செபமாலை

ஐக்கியஅமெரிக்கதேசத்திலும், கனடாவிலுமுள்ள பதினுயிரம் பேருக்கு மேற்பட்ட வயோதிகர்கள் ஒன்றுசேர்ந்து அடுத்தவருடத்திலே ஒருகோடி செபமாலைகள் சொல்லிச் செபமாலைப்படையணியின் தளகர்த்தரான வண. பற்றிக் பெய்ற்றன் சுவாமிகளுக்குத் தாங்கள்கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவார்கள். லூர்துபதிக் காட்சிகளின் நூற்றூண்டுவிழா ஞாபகார்த்தமாக இவர்கள் ஒவ்வொருவரும் தினமும் மூன்றுசெபமாலை சொல்லுவார்கள். வறியவர்களின் சின்னக்கன்னியாஸ்திரிமாரால் நடத்தப்பட்டுவரும் 53 வயோதிகர் மடங்களில் இருந்துவருகிறவர்களே இந்த வயோதிகர்களென்று தற்போது சிக்காகோநகரில் தங்கியிருப்பவரான வண. பெய்ற்றன் சுவாமிகள் தெரிவித்திருக்கின்றூர். இவர்களிற்சிலர் 13 குடும்ப செபமாலை 'ரெலிவிஷன் பிலிம்'களைக் காண்பிப்பதை ஆதரிப்பதற்காக ஒருவருடத்திலே தினமும் ஓர்பென்னி சேமித்துவைப்பதாகவும் வாக்களித்திருக்கின்றனர். செபமாலைத் தேவஇரகசியங்கள் பற்றிய வேறு 15 பிலிம்கள் அவர் இவ்வருடம் ஸ்பெயினுக்குச் செல்லும்போது தயாரிக்கப்படவிருக்கின்றன.

## சிறியபுஷ்பத்தின் தந்தையார்

லிசியேபதி அர்ச். சின்னத்தெரேசம்மாளின் தந்தையாரான லூயிஸ் மாட்டீனுக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டுவிப்பதற்கான மேற்றிராசனவிசாரணையைப் பெயோநகர ஜக்குவெமின் மேற்றிராணியார் ஆரம்பித்திருக்கிறூர். சிறியபுஷ்பத்தின் பெற்றூருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டுவிப்பதற்கான விசாரணையைத் தொடக்க வேண்டுமென்று கேட்டும், ஏனெனில், கிறீஸ்துவ குடும்பவாழ்க்கைக்கு அவர்கள் மேல்வரிச்சட்டமாக இருந்துவந்தார்களென்று அநேகர் கருதுகிறூர்களெனத் தெரிவித்தும் திருச்சபை அதிகாரிகளுக்கு மனுப்பண்ணிக்கொள்ள வேண்டுமெனக்கேட்டு அநேகவருடங்களாக லிசியேபதிக் கார்மேல்மடத்துக்குப் பெருந்தொகையான வேண்டுகோள்கள் அனுப்பிவைக்கப்படலாயின. இந்தவேண்டுகோள்களில் பெருந்தொகையானவை ஐக்கிய அமெரிக்க தேசத்திலிருந்து போய்ச்சேரலாயின. லூயிஸ் மாட்டீன் தம்பதிகளது ஐந்துபெண்மக்களிலும் நால்வர் லிசியேபதிக் கார்மேல்மடத்துக் கன்னியாஸ்திரீமாராஞர்கள்.

## போலிஷ் அதிமேற்றிராணியார்

மஸ்கோநகரிலே 1923-ம்ஆண்டு சமய எதிரிடைகாரணமாகச் சோவியற் அரசாங்கம் நடத்திய விசாரணைஒன்றின்போது மரணதண்டனை விதிக்கப்பெற்ற ஓர் போலிஷ் அதிமேற்றிராணியாருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளும்விஷயமாய் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. போலாந்திலே வில்னுநகர சீயெபிளாய்க்என்ற இந்த அதிமேற்றிராணியாருக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையானது உலகின்அநேக பகுதிகளிலிருந்து பிறந்தஆட்சேபனைகளையிட்டுப் பிந்தப்பத்துவருட சிறைத்தண்டனையாக மாற்றப்பட்டது. போலாந்தைவிட்டு வெளியேறிவிடவேண்டுமென்ற நிபந்தனையின் பேரிலே 1924-ம்ஆண்டு விடுதலை செய்யப்பெற்றஇவர் இருவருடங்களின்பின் 69-ம்வயதிலே ஐக்கிய அமெரிக்கதேசத்தில் மரணமாயினுர். முத்திப்பேறுபெற்றபட்ட அறிக்கைவிஷயமாய் 1954-ம் ஆண்டு ரோமாபுரியில் ஆரம்பமானவிசாரணை இப்போது பூர்த்தியடைந்துள்ளது. இந்த விசாரணையை அதிகாரபூர்வமாக எடுத்துக்கொள்வதுபற்றித் திருச்சடங்காசார திருச்சங்கம் விரைவிலே தீர்மானிக்கும்.

## மனந்திரும்பிய 27 பாதிரிமார்

பிரித்தானியதேசத்திலே சென்ற 1956-ம் ஆண்டின் ஐப்பசிஈருகவுள்ள பன்னிருமாதங்களிலும் 27 பாதிரிமார்மனந்திரும்பிக் கத்தோலிக்கதிருச்சபையில் சேர்ந்திருப்பதாக மனந்திரும்பும் பாதிரிமாருக்கு உதவிசெய்யுஞ்சபைக் காரியதரிசியான திரு. எவ். டபிள்யு. சேம்பேர்ஸ்அவர்கள் தெரிவித்திருக்கின்றூர். இதற்குமுன் இரண்டாவதுஉலகயுத்தம் நிகழ்ந்தகாலத்தில்தான் மிகப்பெருந்தொகையாக ஒருவருடத்தில் பதினுன்கு பாதிரிமார் மனந்திருப்பினுர்களென்றும், இதற்குமுன் வருடமொன்றுக்குச் சராசரியாகப் பத்துப்பாதிரிமாருக்கு மேல் மனந்திரும்பியது கிடையாதென்றும் அவர் அறிவித்திருக்கின்றூர். சென்றவருடத்திலே ஐப்பசிஈருகவுள்ள ஒருவருடத்திலும் முன்னில்லாதவிதமாகப் பெருந்தொகையானபாதிரிமார் மனந்திரும்பியதைப்போல் சென்ற வருடத்தில் ஐப்பசிமுதல் மார்கழிஇறுதிவரை சந்தாப்பணமாகவும், நன்கொடையாகவும் பதினுயிரம் பவுண்உதவிப்பணம் சபைக்குக் கிடைத்தது. அதனுல் சென்றவருடத்திலே சபைக்குக்கிடைத்த உதவிப்பணம் முன்னர் எந்தவருடத்திலுமில்லாத மிகப்பெருந்தொகையாக 25,000 பவுணுயிருக்கிறதென்றும் அவர் அறிக்கையிட்டிருக்கின்றூர்.

## முசோலினியின் உத்தியோகமாளிகை

தன்னுடைய பாசிஸ்தசர்வாதிகார ஆட்சிகாலத்திலே சிஞ்ஞோர் முசோலினி ரோமைநகரிலேதனது உத்தியோக காரியாலயங்களைக் கொண்டிருந்த வெனெஸியமாளிகையானது தற்சமயம் பல்வேறு தொழில்முயற்சிகளில் ஊக்கமாக ஈடுபட்டு அங்குமிங்குமாக நடமாடிக்கொண்டிருக்கும் ரோமை மக்கள் ஆராதனைவழிபாடு நடத்திச்செல்லும் ஓர் சிற்றூலயமாய் இருக்கின்றது. மத்தியகாலத்தில் ஓர்கோட்டையாய் இருந்துவந்த இது ஆடம்பரமான ஓர்மனையாக மாற்றியமைக்கப்பட்டிருந்து, வெனிஸியகருதினுலான பீற்றர் பாபோ ஆண்டவரால் 2-வது பாவிலுபாப்பானவராக அவரது ஞானஆளுகைகாலத்திலே (1455 -1464) உபயோகிக்கப்படலாயிற்று. ஒருநூற்றூண்டின்பின் 4-ம்பத்திநாதபாப்பானவர் இதனை வெனிஸ்குடியரசுக்குச் சந்மானித்தார். அதுமுதல் முதலாவது உலகயுத்தம்வரையிலே இதுஸ்தானிகர்வாசஸ்தலமாய் இருந்துவரலாயிற்று. இந்தமாளிகையில்நின்றே முசோலினி தனது பாசிஸ்த அரசாங்கம் நிறுவப்பட்டதைப் பிரகடனஞ்செய்தார். பிந்தநேச நாடுகளுக்கெதிராக் யுத்தபிரகடனமுஞ் செய்தார்.

# குடும்பசெபமாலைப்படையணியிலே

வண. பற்றிக்பெய்ற்றன்சுவாமியாரின் குடும்பசெபமாலைப்படையணி தனதுபதினைந்தாம்ஆண்டு நிறைவைக் கண்டிருக்கிறது. அதேகாலத்தில் தினமும் குடும்ப செபமாலை சொல்லிவருவதாக ஒருகோடிகுடும்பங்களிலிருந்து உறுதிவாக்குகளைஅதுபெற்றுத் தனதுமுதலாவது வெற்றிஇலக்கை அடைந்திருக்கிறது. இந்த உறுதிவாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக வண. பெய்ற்றன்சுவாமியாரும், அவர்துணைவர்களும், உலகமுழுவதிலுமுள்ள 250மேற்றிராசனங்களைத் தரிசிப்பதிலே ஐந்துலட்சம்மைலுக்கு மேல் பிரயாணஞ்செய்திருக்கின்றூர்கள். இந்தக்குடும்பசெபமாலைப்படையணி 1942-ம் ஆண்டுதைமாதம் ஆரம்பிக்கப்படலாயிற்று. இது அடியிடப்பட்ட அதேவருடத்தில் சுவாமியார் தமது இலக்கை ஒருகோடி குடும்பங்களாக நிர்ணயித்திருந்தார். அதுமுதல் அவர் உலகமுழுவதிலுமே செபமாலைச்சமாகமங்களைப் பிரஸ்தாபமாகநடத்தினுர். இவற்றுளெல்லாம் மாபெருஞ்சமாகமம் ஆஸ்திரேலியாவிலே மெல்போன்நகரில் இற்றைக்குமூன்றுவருடங்களின்முன் நடந்தேறியது. அப்போது அந்நகரிலுள்ள தாவரசாஸ்திரதோட்டத்தில் இரண்டுலட்சம்மக்களுக்குமேல் குழுமியிருந்தார்கள். 15-ம் ஆண்டுநிறைவின் அறிகுறியாக நியூயோக்கைச்சேர்ந்த அல்பனிநகரிலே அன்றுஞாயிற்றுக்கிழமை சாதாரணதிருவைபவம் ஒன்று நடந்தேறியது. அப்போது எழுத்துமூலமாகக் கொடுக்கப்பட்ட ஒருகோடியாவது குடும்பசெபமாலைவாக்குறுதி பெறப்படலாயிற்று. தற்போதுசுவாமியார் செபமாலையின் பதினைந்துஇரகசியங்களையும் தெரிவிப்பதான வர்ணச்சினிமாப்படங்களைத் தயாரித்திருக்கின்றூர். இந்தச்சினிமாப்படங்கள் உலகின்பிரதானபாஷைகளிலெல்லாம் கிடைக்கக்கூடியனவாய்ச் செய்துவைக்கப்படும். இவற்றைத்தயாரிக்க 1,65,000 பவுணுக்குமேல் செலவேற்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரைமாதம்

திவ்விய இஸ்பிரீத்துசாந்து சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம்.

**பொதுக்கருத்து:** பச்சாத்தாபமென்கிற இரட்சணிய தேவதிரவியானுமானத்தைத் தக்கபடிமதித்து அடிக்கடி பெறத்தக்கதாக வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** பெல்ஜிய கொங்கோ, றூவென்டா, உருண்டி ஆதிய ஆபிரிக்காநாடுகளிலுள்ள கத்தோலிக்க பாடசாலைகளுக்காக மன்றுடிக்கொள்வது.

சத்தியவேத
# பாதுகாவலன்

1957-ம் ஆண்டு
சித்திரைமாதம் 25-ந் திகதி.

## தொழிலாளரின் கிறீஸ்துவ இலட்சியம்

மனிதனின் நித்தியமும், பரமார்த்தமுமான நோக்கத்திலிருந்தே மனிததொழிலின் மகிமை பெருமை உண்டாகிறது. தொழில்செய்தல் தனிமனிதனின் முயற்சியாகும். இது தனித்தும், பொதுவிலும் பூலோகஇன்பத்தையும், முடிவில்லாத பரலோக பேரின்பத்தையும்தேடும் நோக்கத்தைக்கொண்டது. மனிதன் முதன்மைவாய்ந்த ஓர்மிருகசாதியைச் சேர்ந்தவனல்ல. புனிததத்துவம்வாய்ந்தவன். தேவபுத்திரத்துவத்திலே பங்கடையும் கதியைக்கொண்டவன்.

இந்த அடிப்படையானஉண்மையை மனதிற்கொள்ளாத எந்தத்தொழிற்கொள்கையும் தன் நோக்கத்தை அடையாது மனிதனைப் பிழையானவழியில்கொண்டுசெல்லும். கொண்டுசென்று அவனைப் பொதிசுமக்கும் மிருகமாகவும், உற்பத்தித்தொழிலில் ஓர்துணைக்கருவியாகவும் மாற்றிவிடுகிறது. ஒருபுறம் இலாப நோக்கத்தையும், பொருள்பண்டத்தின்மிடுக்கையும் பிரமாதப்படுத்தித் தொழிலாளியை ஓர் அடிமைபோல ஆக்கிவிட்டது முதலாளித்துவம். லோகாயதபொருட்களை வைத்திருப்போருக்கு அதிகஇலாபத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் சர்வபொருளாதாரமும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதன்விளைவாகக் கிறீஸ்துவமக்களில் ஒருபாலார் ஆடம்பரவாழ்க்கைநடத்திவர, அவர்களுக்குச் சமமானவர்களும், கிறீஸ்துநாதரில் அவர்களின் சகோதரரென அழைக்கப்படுவோருமான மற்றோர்பாலார் எளிமையில் சாக்கடைச்சீவியம் நடத்தும் அபூர்வமான கோலத்தை நாம் காண்கிறோம்.

மறுபுறம், சமுதாயத்தின் இந்தப்பெரும்பொல்லாங்கை எதிர்த்துநில்லாதது மாத்திரமல்ல, அதனையேஆதாரமாகக்கொண்டுமனிதனின் மகிமையைமறந்து "தொழிலாளர் சுவர்க்கம்" ஒன்றை ஸ்தாபிக்கமுனைகிறது நாஸ்திகப் பொதுவுடைமை. இந்தச்சுவர்க்கத்தில் பாரிய விவசாயத்திட்டங்களும், கைத்தொழில்முயற்சிகளும் கற்பனைசெய்யப் பட்டிருக்கின்றன. இவைகளின் சிலுசிலுப்பானது அவற்றின் உண்மைநிலையை—அதாவது அவைகள் பாரிய அடிமைமுகாங்கள் என்பதையும், அவைகளில் சமத்துவமுள்ளமக்கள் மிருகங்களைப்போல் சீவித்துத் தொழில்செய்து மடிவதையும் மறைத்துவிடுகின்றது.

தொழிலிலும்பார்க்கத் தொழிலாளி மேம்பட்டவன். அவனுடையதொழிலை இயக்கிஉபயோகப்படுத்தும் முதலாளித்துவ முறையோ, பொதுவுடைமை முறையோ அவனிலும்பார்க்க உயர்ந்தனவல்ல, கீழ்ப்பட்டனவே. சிருட்டிகளுக்கு அரசன் மனிதன். கடவுளுடைய தொழிலையே தொடர்ந்து நடத்தும்படி இவ்வுலகத்தில் வைக்கப்பட்டவன். அவன்தனதுபுத்திசித்தத்தினுலும், கைகளினுலும் உழைத்துச் சிருட்டிகருக்கு மகிமையும், துதியும் உண்டுபண்ணுவதற்கு உதவியாகவேண்டிய உலகத்தை அமைக்கவேண்டியவன். இந்த இலட்சியத்துக்கிணங்கக் கிறீஸ்துவதொழிலாளி தேவனுடைய பிள்ளையாய்ச் சீவிக்கிறன். தன் பிள்ளைகளைத் தேவனுடையபிள்ளைகளாய் வளர்த்து வருகிறன். தேவசுதனுகிய கிறீஸ்துநாதரின் சகோதரரென்று மற்றமனிதருக்குச் சேவைபுரிகிறன். ஆகையால், எதிர்ப்புக்கும், வெறுப்புக்கும், அநீதிக்கும் இடமில்லை. ஒற்றுமையும், அன்பும், நீதியுமே இடம்பெறவேண்டியன. யேசுவின் திருக்கைத்தாதையும், நசரேத்தின் தொழிலாளியுமான சூசைமாமுனிவரில் இந்தஇலட்சியத்தைக் காண்கிறோம். அவர் கடவுளையும், தம்மோடொத்த மற்றமனிதரையும் நேசித்தும், அவர்களுடைய தொழிலிலும், வறுமையிலும் பங்கெடுத்தும்வந்த நீதிமான். சுபாவமுறையில் தேவசுதனும், தொழிலாளியின் மகனென அழைக்கப்பட விரும்பியவருமான யேசுக்கிறீஸ்துநாதரைத் தமதுஇல்லத்தில் தமதுகைத்தொழிலினுல் போஷித்துவந்தவரும் இவரே.

தொழிலாளிகளின் இந்தஉத்தம இலட்சியபுருஷரை உலகத்தின்முன் வைக்கவேண்டிய கடமையைக் கிறீஸ்துவமக்களுக்கு நினைவூட்டவும், உலகத்தவர் நசரேத்தின் தொழிலாளிகுடும்பத்தைத் தங்கள்வாழ்க்கைக்கு ஓர் எடுத்துக்காட்டாக மேற்கொள்ளவும்வேண்டிக் கத்தோலிக்கதிருச்சபை வைகாசிமாதத்தின் முதல் நாளைத் தொழிலாளரான அர்ச். சூசையப்பரின் திருநாளாக ஏற்படுத்தியிருக்கிறது. இத்தினத்தைச் சமூகநீதியையும், பரஸ்பரமரியாதையையும், சகோதரஅன்பையும் கிறீஸ்துநாதரின்நேசத்துக்காகக் கடைப்பிடித்து, உண்டாகும்சக்தியால் வகுப்புத்துவேஷத்தையும், வகுப்புவெறியையும் மேற்கொள்ளமுடியும்என்பதை அழுத்தந்திருத்தமாய்க் கூறுந்தினமாகச் செய்வது கிறீஸ்துவமக்களின் கடமை. மேலும், இத்தினத்தை விசுவாசமுள்ளமனிதர் தங்கள்புத்திமுயற்சியாலும், கைத்தொழில்முயற்சியாலும் கடவுளுக்கு மகிமையை உண்டாக்குவதும், மனிதரை அவரோடு நெருக்கமாக உறவுகொள்ளச்செய்வதுமான ஓர் சமுதாய அமைப்பைஉண்டுபண்ண ஆக்கமுயற்சிசெய்யும் தினமாகவும் கொள்ளவேண்டும்.

### அர்ச். சூசையப்பர் — தொழிலாளி
# திருநாளின் ஆரம்பவைபவம்

**தமிழாக்கம் P. S.**

"கதலிக் பையர்சைட்" என அறியப்படுகின்ற சிறந்த கத்தோலிக்கசஞ்சிகையிலே அர்ச். சூசையப்பர் — தொழிலாளி—என்றபுதியதிருநாளை 1955-ம் ஆண்டு வைகாசிமாதம 1-ந் திகதியன்று பரிசுத்தபிதா 12-ம் பத்திநாதபாப்பாசர் ஏற்படுத்திய வர்த்தமானம் பின்வருமாறு எடுத்துக்கூறப்பட்டிருக்கிறது.

#### "உங்களுக்கு விருப்பமா?"

றோமாபுரி, அர்ச். பேதுருவானவர் மகாதேவாலய சதுக்கத்திலே இவ்வினு பிறந்தது. ஒலிபெருக்கிகள் அகன்ற "வியாடெல்லா கொன்சிலியா சோன்" என்றவீதியில் குழுமியிருந்த 7,50,000 ஆடவர்களும், பெண்களும் இவ்வினுவைக் கேட்கும்படிசெய்தன.

இத்தாலியகத்தோலிக்கதொழிலாளிகள் சங்கத்தின் பத்தாம்ஆண்டுநிறைவு விழாவைக் கொண்டாடுமுகமாக அத்தேசத்தின் பலபாகங்களிலுமிருந்து எண்ணிறந்த தொழிலாளிகள் பரிசுத்த பாப்பாசரின் பாதங்களைநாடி வந்திருந்தார்கள். அவர்களுக்கென நிகழ்த்தியசொற்பொழிவிலே பரிசுத்தபாப்பாசர் வைகாசிமாதம் 1-ந்திகதி அர்ச். சூசையப்பர் — தொழிலாளியின் திருநாள் ஆடம்பரமாகக் கொண்டாடப்படுமென்றுதெரிவித்தார். சற்றுவேளையின் பின் அவர் புன்முறுவலுடன் அவர்களைப்பார்த்து, "இது உங்களுக்கு விருப்பமா?" என்று வினவினர்.



அப்போது அங்கு குழுமியிருந்த தொழிலாளிகள் தங்கள்சம்மதத்தை வெளிப்படுத்திய பேரொலியின் சப்தமோ ஒருஇடிமலை வெடித்ததுபோலிருந்தது. ஏழரைலட்சம்பேருக்கு மேற்பட்ட மக்கள் ஆர்வத்துடனும், அக்களிப்புடனும் இத்திருநாளை வரவேற்ற காட்சி என்றைக்கும் மறக்கமுடியாத ஒரு இன்பகாட்சியாகும். இதுவாழ்க்கையிலேயே ஓர்இணையற்ற அனுபவமாக எண்ணப்படவேண்டியது.

அவர்களின் பேரொலியதிர்ச்சியால் அர்ச். பேதுருவானவர் மகாதேவாலய சதுக்கத்தில் நிறுவிநிற்கும் பெரிய கற்றூண்களிலுள்ள சுரூபங்கள் அசைந்தனபோலிருந்தன. இப்பேரொலி பல கட்டிடங்களிலும், பலமுகப்புகளிலும் எதிரொலிசெய்து, அம்மகாதேவாலய முகப்புவாயிலில் ஒரேஅலையைப்போன்று மோதியது. அங்கிருந்து பாப்பரசர் இத்தாலிய தொழிலாளிகளான ஆடவர்களுக்கும், பெண்களுக்குமாக ஓர்சொற்பொழிவாற்றினர். அது ஓர் சிறந்த பேச்சாகஇருந்தது. தொழிலாளிகள் தங்கள் அன்புக்கும், பிரமாணிக்கத்திற்கும் அடையாளமாகக் கொண்டுவந்த காணிக்கைகளுக்காக நன்றிகூறினர். தேவனிலும, சத்திய மாதாவாகிய திருச்சபையிலும் அவர்கள்கொண்டுள்ள ஸ்திரமான பற்றுதலை மிகவும் மெச்சினர். அவர்களுக்குத் தமதுஉதவியையும், அன்பையும, ஆதரவையும்அளிப்பதாக உறுதிவாக்குக் கொடுத்தார். அவர்கள் நாஸ்திக—சமதர்மக் கொள்கைகளைப்பற்றியும், அவற்றின் பலதிறப்பட்ட உருவங்களைப்பற்றியும் மிகவுங்கவனமாயிருக்க வேண்டுமென்று எச்சரிக்கைவிடுத்தார். தேவஊழியத்தில் அவர்கள்காட்டிய ஆர்வத்தையும், அத்துணை பெருந்திரளாக அவர்கள வந்துகூடியதையும் வியந்துகொண்டார். அவர் தமதுசொற்பொழிவிலே இருபத்திரண்டு முறைக்குக் குறையாமல் அவர்களின் விடையை—சம்மதத்தைப் பெறுவதற்காகத் தாமதித்தார். ஒவ்வொருமுறையும அவர்களின்விடை ஓர்பேரொலியாகவே கிடைத்தது.

முன்னிருந்த சிகப்புவைகாசி 1-திகதி எக்காலத்திற்கும் வெள்ளைவைகாசி 1-ந் திகதியாக மாறியதன்மையை எவராவது கனவிலும் ஒருபோதுமே நினைத்திருக்கமுடியாது. ஒருசொல்லில் கூறவேண்டுமாயின் நசரேத்தின் தொழிற்சாலை உலகமுழுவதையும் அடக்குவதாயிறறு.

அப்பத்திரிகையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: பரிசுத்தபாப்பாசரின் சொற்பொழிவானது பதின்மூன்றும் சிங்கராய பாப்பானவர்விடுத்த "றேறும் நொவாறும்" என்ற பொதுநிருபத்துக்குப்பின்னும், பதினொராம்பத்திநாத பாப்பானவர்விடுத்த "குவாட்ரு ஜெசிமோ அன்னே" என்ற பொதுநிருபத்துக்குப்பின்னும்ஏற்பட்ட முன்னேற்றங்களைச் சுருக்கமாகவிளக்கி, அவைகளுக்கு முடிசூட்டுவதுபோல் அர்ச். சூசையப்பர்— தொழிலாளியின் திருநாள் ஏற்படுத்தப்பட்டது. சஞ் சூசையப்பரே பலவித தொழிலாளிகளின் பாதுகாவலர். அவரே தொழிலாளிகளின் மதியிலும், தொழிற்சாலைகளிலுமிருந்து அவர்களின் அழியாதஆத்துமங்களுக்கு ஏற்படக்கூடிய தீமைகளை அகற்றுவார். அவர்களின் சுயமரியாதையைக் காப்பாற்றுவார். அவர்களுடையஉரிமைகளைப் பெற்றுக் கொடுப்பார்.

றோமாபுரியில் வைகாசி 1-ந் திகதியன்று தொழிலாளிகளின் திருநாள் உண்மைக்கருத்தையும், உன்னதநிலையையும் அடைந்ததென்று உண்மையாகக்கூறலாம். இதுஒருபெரியவெற்றி மகோற்சவம். தொழிலாளிகளாகிய ஆண்கள், பெண்கள் மத்தியில் கத்தோலிக்ககொள்கைகளின் வெற்றியின் சின்னமாக இத்திருநாள் இருக்கிறதென்று தயங்காமற்கூறலாம்.

---

● மலையாளத்திலே (கோளஇராச்சியம்) யக்கோபித்த பிரிவினைச் சபையிலே பிரஸ்தாபம்பெற்ற ஓர்குருவரும், எட்டுப்பிள்ளைகட்குத் தந்தையருமான 66 வயதுடைய கனம். ஜோண அவர்கள் மனந்திரும்பிக் கத்தோலிக்கதிருச்சபையுடன் ஐக்கியப்பட்டுவிட்ட சம்பவமானது சமீபத்திலே அப்பிரிவினைச் சபையில் மிகுந்த பரபரப்பை உண்டுபண்ணிவிடலாயிற்று. யக்கோபித்த பிரிவினைச்சபையில் காணப்பட்ட முடிவற்ற பிணக்குகளும், முரண்பாடுகளுமே இவர்மனந்திரும்பிக் கத்தோலிக்க திருச்சபையுடன் ஐக்கியம் பூண்டுகொள்ளக் காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சதாசகாயமாதா கோணம்

### அதிசயஆரோக்கியமும் ஆன்மபலமும்

இந்தியஅரசாங்கத்தில் உயர்பதவி வகித்த ஒருஉத்தியோகத்தர் இருந்தார். அவர் கத்தோலிக்கர் அல்ல. அசாம்மாகாணத்தின் தேசாதிபதியோடு அவர் மிகவும்நெருங்கிப் பழகியதாலும், தேசாதிபதியவர்கள் வடஇந்தியாவிலுள்ள கத்தோலிக்கமக்களின் நிலைமையைச்சீர்ப்படுத்த எடுத்துள்ள பிரயாசைகளை அவர்நன்குஅறிந்திருந்தாலும் கத்தோலிக்கமக்கள் மட்டில் மிக்க அனுதாபமுள்ளவராய் இருந்தார். அவருக்கு ஒரேயொருமகள் இருந்தாள். அவள் ஒருகத்தோலிக்கரை மணமுடிக்க விருப்பங்காட்டியபோது அவர் அதற்குத்தடைசெய்யாது சம்மதங்கொடுத்தார்.

விவாகம்முடிந்து சிலமாதங்களின்பின் அவளுக்குக் கடுமையானவருத்தம் வந்தது. காய்ச்சல் கடுமையாக அடித்தது. டக்றர்மார் எவ்வளவோ பிரயாசைப்பட்டும் காய்ச்சல் சற்றேனுங்குறையவேயில்லை. அது என்னவிதமான காயச்சல்என்றுவது, அவளைப் பீடித்திருந்தநோய் என்னவென்றுவது அவர்களாற் கண்டுகொள்ள முடியவில்லை. மாதம்ஒன்று முடிந்தது. அந்தியவேளை வந்துவிட்டதென உணர்ந்த இனசனர்எல்லோரும் அவளைச் சூழ்ந்துகொண்டார்கள். அப்போது திடீரென அவள்எழுந்து கட்டிலில்இருந்தாள். அது சன்னியின் கடைசிச்சேட்டையாக்குமென அவளைப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் எண்ணினார்கள். நூரப்போகும்நெருப்பின் கடைசிமினுக்கந்தான் இதுஎன்றார்கள் சிலர். ஆனால், தங்கள்எண்ணங்களும், முடிவுகளும் முழுத்தவறென அவர்கள்விரைவிற் கண்டுகொண்டார்கள். அவள் தன்தலைமயிரைப் பின்னுக்குஒதுக்கித் தள்ளிவிட்டு, தன்கணவன் பக்கமாகத்திரும்பி, "என்நேசப்பத்தாவே! நான் ஒரு விசித்திரமான கனவுகண்டு எழுந்திருக்கிறேன். ஒரு அலங்காரமானமாது ஒரு குழந்தையைக் கையிலேந்தியவண்ணம் நிற்கக் கண்டேன். அந்தமாது என்னைப் பார்த்து: "தேவதாய்நானே! உனக்குந்தாய் நான்தான். நீஎனதுமகள்; ஆனால், நீயோ இந்தஉண்மையை அறியவில்லை. நீ என்னைநேசி. என்னுடைய சமயத்திற்சேர்" என்று இனிய குரலில் கூறினாள். திடுக்கிட்டுவிழித்தேன். பூரணசுகம் அடைந்தேன். காய்ச்சல் மாயமாய்மறைந்துவிட்டது" என்றுசொன்னாள்.

கிட்டநின்றவர்கள் அவளுக்குக் குணபேதமாக்கும்என்று ஏங்கினர். சிலர் வியாதியின் கூறுக்குமென்றனர். பக்கத்தில்இருந்து பார்த்துநின்றடக்றர் அதிசயத்துடன் அவளின்கிட்டச்சென்று பரிசோதித்துப்பார்த்துப் பயங்கரமான சுரம் முற்றாக அவளை விட்டுவிட்டதென்றும், அவளுக்கு ஒருவிதநோயும் இல்லைஎன்றும்கூறிச் சென்றுவிட்டார்.

படுக்கையண்டை ஒரு செபப்புத்தகம் இருந்தது. அதை அவள்எடுத்துத் திறக்கவே, பாலனை ஏந்தியபடி சதாசகாயமாதாவின் திருப்படம் ஒன்று இருந்தது. அவள்உடனே அதை அங்கிருந்தஎல்லோருக்குங் காட்டி, "நான் கண்டதாயும், குழந்தையும் சரியாக இப்படித்தான்" என்றுசொன்னாள். சதாசகாயமாதாவைப்பற்றி அறிந்தவர்கள் விஷயத்தை விளங்கிக்கொண்டார்கள். மாதாவின்புதுமையை வாயாரவாழ்த்தினார்கள்.

·சிலநாட்களின்பின் தேவதாயார் கேட்டுக்கொண்டபடி அவள் நமதுதிருவேதத்திற் சேர்ந்துகொண்டாள். உத்தமகத்தோலிக்கபெண்மணியாக அந்த ஊரவர்கட்கு ஒரு மேல்வரிச்சட்டமாகச் சீவித்துவருகிறாள்.

சதாசகாயமாதாவே! உமக்குப் புகழ்[illegible]!

# தொழிலாளிகளுக்கு மாதிரிகையான சூசை மாதவர்

பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பர் மறைந்தசீவியத்தின் ஓர்மகா வீரபுருஷராகத் திகழுகிறார்.

மனிதர்எல்லோருள்ளும் மகத்தனா பதவிக்கு உயர்த்தப்பட்ட சூசைமாதவனார் தமது பாரதூரமானகடமைகளைச் சுமுத்திரையாக நிறைவேற்றினார். ஒருவிதபடாடோபமுமில்லாது, தேவசித்தத்துக்குஅமைந்து, தாழ்ச்சியென்னும் ஆடையால் தம்மைமறைத்து, மற்றவர்களால் அறியப்படாதவிதமாகச் சீவித்துவந்தார். அப்படியிருந்தாலும், பரிசுத்தமாதாவாகிய திருச்சபை நசரேத்தூரில்சஞ்சரித்த பூலோகதிரித்துவத்தின் தலைவருக்குக் காட்டவேண்டிய சங்கைமரியாதையைக் காட்ட மறக்கவில்லை. மனிதஅவதாரம்எடுத்த தேவகுமாரனாகிய திவ்வியயேசுவும், அவருடைய திருத்தாயாராகிய மரியமாளும் உலகஇரட்சகரின் கைத்தாதையாக எல்லாமனிதருள்ளும் தெரிந்தெடுக்கப்பட்ட சூசையப்பருக்குக் கீழ்ப்படிந்து நடந்தார்கள் என்றஉண்மையை நாம் மறக்கமுடியாது.

அர்ச். சூசையப்பர் சாதாரணதிருச்சபையின் பாதுகாவலர் — பெத்லகேம் சிற்றூரில், முதல்நத்தால்தினமன்று அவர் தேவசித்தத்துக்கு முற்றாகத்தம்மைக் கையளித்து நடந்துகொண்ட தன்மையை எவர்தான்வியந்துகொள்ள மாட்டார்? ஒருவித ஆயத்தமுமில்லாது நடுச்சாமத்திலே, தேவதூதனின்வார்த்தையைக் கேட்டமாத்திரத்திலே தேவதாயாரையும், திருப்பாலனையும் ஒருகழுதைமேலேற்றி எகிப்துக்குப்புறப்பட்ட வீரத்துவசெயலானது, அவர் தேவகட்டளைக்கு எவ்விதம் அமைந்துநடந்தாரென்பதைத் துலாம்பரமாகக்காட்டுகிறது.



நசரேத்தூரில், தமதுதச்சசாலில், எத்தனையோவருடங்களாகத் திருக்குடும்பத்தின் சம்ரட்சணைக்காகப் பாடுபட்டுஉழைத்த தச்சச்சூசையப்பரை உலகம்முழுவதிலும் குடும்பசம்ரட்சணைக்காக வியர்க்கக்களைக்க வேலைசெய்யும் எந்தத்தகப்பன், எந்தத்தொழிலாளி தனதுமேல்வரிச்சட்டமாக மதிக்கவும், நேசிக்கவும் பின்வாங்குவான்?

சூசையப்பரின் கரிசனையுள்ள மேற்பார்வையின்கீழ் யேசுநாதர் மேசை, கதிரை, கலப்பைசெய்ய முதன்முதல் கற்றுக்கொண்டார் — தேவகுழந்தையின் முதல்ஆசிரியர் சூசையப்பர்என்பதினால் அவரைக் கல்வியின்பாதுகாவலரென்றும் அழைக்கிறோம். தொழில்பழகுங்காலத்தில் கைகளினால் வேலைசெய்வது எவ்வளவுகஷ்டம் என்று யேசுநாதர் நன்குஅறிந்திருப்பார். அவரும் நெற்றிவியர்வை நிலத்திற்சிந்தத் தமதுஜீவனத்துக்காகச் சூசையப்பரோடுசேர்ந்து பாடுபட்டுழைத்தார். மனிதசங்கைக்குக் கைத்தொழில் இழுக்கானதென்னும் தற்காலத் தப்பபிப்பிராயத்தை யேசுநாதர் ஏற்றுக்கொண்டவரல்ல என்பது வெளிப்படை.

தன் "பிதா" கேட்கும் எதையும் கொடுக்க எந்தப்பிள்ளைதான் மறுப்பான்? தேவகைத்தாதையாம் சூசையப்பர்கேட்பதைத் தேவசுதன் மறுக்க முடியாது. தேவசிம்மாசனத்தின் முன் வல்லபமிக்க மத்தியட்சராக விளங்குகிறார் அர்ச். சூசையப்பர். துன்பதுயரால்வாடும் குடும்பங்களின் அடைக்கலம் அர்ச். சூசையப்பர். "ஓ! அர்ச். சூசையப்பரே! உம்மை நோக்கி அபயமிடுகிறோம். மரணம் எம்மைக்கிட்டும்போது எங்களுக்கு ஆறுதலாயிரும். நல்லமரணத்தை அடைந்துதாரும்" என்று நாளாந்தம் நாம்சொல்லும் சிறியசெபம் நமக்கு அளவில்லாதநன்மை பயக்கும். யேசுநாதருடையவும், அவர்தம்திருத்தாயாருடையவும் திருக்கரங்களில் நல்ல மரணம்அடைந்த அர்ச். சூசையப்பர் தமதுஒத்தாசையைத் தேடும்நமக்கு நன்மரணசகாயம் அடைந்துதருவாரென்பது நிச்சயம்.

"மகளே! உன்தகப்பன் உன்னைப் போல நல்லபெயர்கேட்கவும், நல்லகதி அடையவும் நீவிரும்பவில்லையா? நான் முன்மாதிரிகாட்டவேண்டிய இடத்தில் நீஎனக்கு முன்மாதிரிகாட்டினாய், வழிகாட்டினாய்" என்றுகூறித் தகப்பனும் கத்தோலிக்கசமயத்தைத் தழுவிக்கொண்டார்.

### யாழ்ப்பாணக் கத்தோலிக்க தொழிலாளர் உறவுச் சமாகமம்

வைகாசிமாதம் 1-ந்திகதி புதன்கிழமை தொழிலாளர்களின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பர் திருநாள் கொண்டாடப்படும்.

#### கொண்டாட்ட நிகழ்ச்சிநிரல்

1. காலை 7-00 திவ்வியபூசைப்பலி. (ஆசனக்கோவிலில்)
2. ,, 8-00 காலைப்போசனம்.
3. ,, 9-00 சொற்பொழிவுகள் (மூன்றுபாஷைகளிலும்).
4. காலை 10-30 – 11-30 திருமணித்தியால ஆராதனை.
5. மாலை 2-30 சொற்பொழிவுகள்.
6. ,, 4-00 அர்ச். சூசையப்பர் திருச்சுரூபத்துடன் ஊர்வலம்
7. மாலை 6-00 திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் (றெக்ளமேசன் மைதானத்தில்).

ஈற்றில் கொழும்பிலிருந்துவரும் பிரமுகர்கள்மூவர் முப்பாஷைகளிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள்.

சகலகத்தோலிக்கதொழிலாளர்களும் உட்படக் கத்தோலிக்கமக்கள் அனைவருமே மாபெருங்கூட்டமாக வந்து இக்கொண்டாட்டத்திற்கலந்து, அர்ச். சூசையப்பரின் தவறாதபாதுகாவலையும், அடைக்கலத்தையும் நாடி, இக்காலத்தில் ஏற்பட்டிருக்கும் சகலஆபத்துக்களில்நின்றும் திருச்சபையையும், தங்களையும் தற்காத்துவைக்குமாறு அவரை இரந்து மன்றாடும்படியாகக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.


### சம்பத்திரிசியார் கல்லூரி
### பயிற்சிபெற்ற ஓர்தமிழ்ஆசிரியை தேவை

ஆங்கில எஸ். எஸ். சி. தராதரப்பத்திரமுள்ள பயிற்சிபெற்ற ஓர் தமிழாசிரியை தேவை. சங்கீதம், சித்திரம்ஆதியன படிப்பிக்கக்கூடியவராயும் இருக்க வேண்டும்.

கல்லூரி அதிபர்


### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுக்கிறீஸ்துநாதரின் இரக்கத்தாலும், சதாசகாயமாதாவின் வேண்டுதலினாலும் நான் விரும்பிய பலன் கிடைத்ததால் நன்றியறிதலாக இதைப் பிரசுரிக்கிறேன்.

பி. எட்மன் உவில்விறற் ராசா

### புத்தக மதிப்புரை

## வேதபோதக வினாவிடை

தமிழாக்கம்: J. தனசாமி, சே. ச.
பிரசுரம்: தே நோபிலி அச்சகம்.

'வேதபோதக வினாவிடை' என்ற பெயருடன் இந்தியமக்களுக்குப் பயன்படத்தக்கமுறையில் ஒருபுதிய ஞானோபதேசப்புத்தகம் வெளிவந்துள்ளது. வேதபோதகர், இந்தியாவில், திருச்சபை, அப்போஸ்தலகடமை, நம்நாட்டு விசுவாசிகள்என்ற தலைப்புகளில் 68 வினாவிடைகளை அடக்கியுள்ளது. விடைகள் இரத்தினச்சுருக்கமாக அமைந்துள்ளன. எண்சொல்லும் நற்செய்தி என்றஅட்டவணை பலசெய்திகளையும் அடக்கியதாயுள்ளது. எமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வர்த்தமானம்

## புதியஆயப் போக்குவரத்து

புங்குடுதீவு–நயினாதீவு ஆயப்போக்குவரத்துச்சேவை அடுத்த வைகாசி மாதம் 1-ந்திகதியன்று ஆரம்பமாகவிருக்கிறது. புங்குடுதீவு குறிகாட்டுவான் துறைமுகத்துக்கும், நயினாதீவுத் துறைமுகத்துக்குமிடையே இப்போக்குவரத்து நடைபெறும். நயினாதீவுத் துறைமுகத்தில் ஆயப்பணம் அறவிடப்படும். ஆயம் குத்தகையிலே விற்கப்படவிருக்கிறது.

## தினமும் 9,000 புசல்நெல்

மட்டக்களப்புப்பகுதியிலே உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் அரசாங்க விற்பனைப்பகுதியால் ஐக்கியவிலைபொருள் உற்பத்திவிற்பனவுச் சங்கங்களிடமிருந்து வாங்கப்படும்நெல்லிலே தினமும் சுமார் 9,000 புசல்நெல் அனுராதபுரம், யாழ்ப்பாணம், குருநாகல், புத்தளம்முதலாம் இடங்களுக்கு றெயின்கள்மூலமாக அனுப்பிவைக்கப்படுகிறது. அங்குள்ள விலை பொருட்சங்கங்கள் தினமும் சுமார் 15,000 புசல்நெல்லை அரசாங்க விற்பனைப்பகுதிக்கு விற்றுவருகின்றன.

## இந்தியபிரதமரின் விஜயம்

இந்தியபிரதமர் பண்டிதஜவஹர்லால் நேரு அவர்கள் அடுத்துநிகழும் வைகாசிமாதம் 17-ந்திகதி வெள்ளிக்கிழமை இலங்கைக்கு விஜயஞ்செய்யவிருக்கின்றார். புத்தஜயந்திவிழாவின் இறுதிக்கொண்டாட்டங்களில கலந்துகொள்ளவே அவர் இங்குவருகின்றார். அவர் பிரதமர்பண்டாரநாயகாவுடன் நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தைகளில் இலங்கையிலுள்ள இந்தியர்பிரச்சினையும் ஒன்றாகுமெனத் தெரியவருகிறது. அவர் இலங்கையிலே தங்கியிருக்கும் ஐந்துதினங்களிலும் மலைநாட்டுத் தமிழரைச் சந்திக்கும்படியாகத் தோட்டப்பகுதிக்கும் செல்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

## சகோதரருக்கு மரணதண்டனை

டி. ஜி. சிறிசேன, டி. ஜி. ஹர்மானிஸ், டி. ஜி. பீற்றர், டி. ஜி. தாமதாச எனும் சகோதரர்கள்நால்வரும், இவர்களின் தகப்பனுன பிரான்சீஸ்ஸும்சேர்ந்து சென்ற 1955-ம்ஆண்டு மார்கழி மாதம் 21-ந்திகதியன்று பி. வி. கெமிலிஸ் என்பவனைக் கொலைசெய்தார்களென்று காலிச்சுப்பிறீங்கோட்டிலே தொடரப்பட்டிருந்த கொலைவழக்கான து நீதியரசர் குணசேகராவால் விசாரணைசெய்யப்பெற்று எதிரிகள்ஐவரும் மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஐந்தாம்எதிரியான தகப்பன் மரணதண்டனை விதிக்கப்பட்டானெனினும் விசாரணைக்குமுன் அவன் இறந்துபோய்விட்டான்.

## அம்மைப்பால் குத்துவதன்பயன்

அம்மைப்பால் குத்திக்கொள்பவர்கள் குத்திக்கொண்டவுடன் அதைத் துடைத்துவிடவோ, அன்றேல் தேய்த்துவிடவோகூடாது. அப்படிச்செய்தால் அம்மைப்பால் குத்திக்கொள்வதில் பயனில்லை. அம்மைப்பால்குத்திய மூன்றாவதுநாள் குத்தியஇடம் சிவந்திருப்பதுடன் புண்ணாகியுமிருக்கும். பின்னர்அது சீழாகமாறிச் சிறிதுசுரமும்வரலாம். அதனால் கவலைப்படவேண்டியதில்லை. அப்படியேற்படுவது அம்மைப்பால் குத்தியதினால் பலன் ஏற்படுவதின் அறிகுறியாகும். வெகுசிலருக்கு ஏற்படுவதுபோல அதிகசுரங்கண்டால் டக்டர்மாரைக்காணவேண்டும். சீழ்மறைந்தவுடன் அவ்விடத்தில் வடுக்களகாணப்படும். அவ்வடுக்களினால் கவலைப்படவேண்டியதில்லை. அம்மைநோய் ஏற்படுவதைவிட வடுக்கள் ஏற்படுவதினால் பாதகமில்லை. அதனால் அம்மைநோயிலிருந்து பூரணபாதுகாப்பு ஏற்படும். அம்மைப்பால்குத்திக்கொண்டபத்துநாட்களில் மூன் சொல்லிய அடையாளங்கள் காணப்படாவிட்டால் மறுபடியும் அம்மைப்பால் குத்திக்கொள்ளவேண்டும்.

## பாடசாலைகளும் வகுப்புத்துவேஷமும்

பாடசாலைப் பிள்ளைகளிடையே வகுப்புத்துவேஷமும், இனவெறியும் காணப்படுவது தூர்ப்பாக்கியமாகும்; இது தொடர்ந்து காணப்படுமானால் நடைமுறையிலும் இந்தப்பிரிவினை ஒட்டிக்கொள்ளும்; வகுப்புத்துவேஷமும், இனவெறியுமே எங்கும் வளர்ந்துகொண்டிருக்கின்றன; இப்படியான இனபேதத்தையும், வகுப்புவேற்றுமையையும் சிறுபான்மையினரான மக்களிடம் காட்டக்கூடாதென்று சென்றவியாழக்கிழமை நடைபெற்ற பிறிஸ்பிற்றேறியன் பெண்பாடசாலைப் பரிசளிப்புவிழாவில் பேராசிரியர் சி. ஜே. எலியேசர் அவர்கள் கூறியிருக்கின்றார்.

## பரிதாபகரமான மரணம்

கொடிகாமத்தைச் சேர்ந்த பி. கணேசபிள்ளை என்பவர் சென்றசனிக்கிழமைஅதிகாலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்தைநோக்கி வந்துகொண்டிருந்த றெயின்வண்டியில் பிரயாணஞ்செய்துகொண்டிருந்தபோது தலாவைக்கும், தம்பத்தகமாவுக்கும் இடையிலுள்ள றெயில்வேப்பாலத்தின் இரும்புக்கேடரில் தலைமோதுண்டகாரணமாகப் படுகாயமடைந்து அனுராதபுரஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுமுன்னரே மரணமாயினர். கொழும்பிலுள்ள ஓர் கம்பெனியின் விற்பனைபிரதிநிதியான இவர் ஓர்மாணவரும், ஓர்பத்திரிகாசிரியருமான தனதுஇருநண்பர்களுடன் அன்றுதினம்கொடிகாமத்துக்கு வந்துகொண்டிருந்தார்.

## தாதிகளான கன்னியாஸ்திரிமார்

அரசாங்க ஆஸ்பத்திரிகளிலே தாதிகளாயிருந்து நோயாளரைப் பராமரித்துவருகின்ற கன்னியாஸ்திரிமார் பின்னரும்தொடர்ந்து கடமைபார்க்க அனுமதிப்பதா என்பதுபற்றிச் சமீபத்திலே அரசாங்கம் ஓர்முடிவுக்கு வரவிருக்கிறது. அரசினர்ஆஸ்பத்திரிகளில் 12மதர்மாரும், 197 கன்னியாஸ்திரிமாருமே தற்போது இருந்துவருவதாகச் சுகாதாரமந்திரி தெரிவித்திருக்கின்றார். ஆஸ்பத்திரிகளில் சேவைசெய்யத் தெரிவுசெய்யப்படும் கன்னியாஸ்திரிமாரின்தொகையை முந்திய அரசாங்கம் 1951-ம்ஆண்டு கட்டுப்படுத்தியது. அரசாங்கசேவையில் தற்போதுள்ள நேர்ஸ்மார்— அதாவது தாதிகள் ஏறக்குறைய 1,400 பேர். ஆனால், தற்போதுகுறைந்தபட்சம் 4,600 தாதிகள் தேவைப்படுகின்றார்கள். கன்னியாஸ்திரிமாரைத் தாதிகளாக நியமனஞ்செய்வதை முற்றாகக் கைவிடவேண்டுமென்று புத்தகம்மிஷன் தனதுஅறிக்கையில் சிபாரிசுசெய்துள்ளதென்பது ஈண்டுகுறிப்பிடத்தக்கது.

## அரசியலைக் கலக்கவேண்டாம்

சப்பிரகாமமாகாணத்தின் பிரதம புத்தபிக்குவான கனம். தர்மானந்த தேரோ பாணந்துறையிலே அன்று ஓர்கூட்டத்தில் பேசியபோது பாராளுமன்றத்திலே வெலிமடைப்பிரதிநிதியான கே. எம். பி. இராஜரத்னாவுக்கு ஓர்புத்திமதிகூறினார். அதாவது: "உம்மைப்போன்றவர்களுக்கு ஒன்றுகூறவிரும்புகிறேன். அளவுக்குமீறிக் கண்டிப்பதையும், காரியங்கள்செய்வதையும் நிறுத்திக்கொள்ளவேண்டும். நான் எந்தஅரசியல்கட்சியையும் ஆதரிப்பவனல்ல. ஆனால், உலகம் புத்தபெருமானின் இந்நாட்டை இழிவாகப்பேசுவதை நான்விரும்பவில்லை தற்போதைய அரசாங்கத்தில் குறைகள் இருக்குமானால் அதற்கு நீரும் பொறுப்பாளியே. தீவிரமனப்பான்மையைக் கைவிட்டு எந்தவிஷயத்தையும் நிதானமாகச் சிந்திக்கவேண்டியகாலம் வந்துவிட்டது. சமயத்துடன் அரசியலைக் கலக்கமுயலாதீர்கள் என்பதுதான் நான் கூறக்கூடிய இறுதிப்புத்திமதியாகும்" என்பதே.

# என்மகன் .... என்குரு

[ நிர்மலன் ]

ஓர்மாது கோவிலில் முழந்தாட்படியிட்டாள். அவளதுநெற்றியின் சுருக்குகள் அவளுடைய முதிர்ந்தவயதுக்குச் சான்றுபகர்ந்தன. பயபக்தியுடன் கைகளைக்கூப்பியபடியே முழந்தாளிலிருந்தாள். பூசையிலே குருவானவர் தமதுகரங்களில் வெள்ளை அப்பத்தை எழுந்தருளச்செய்து: "இது என்சரீரம்…" என்றமொழிகளை மெதுவாக உச்சரிப்பதைக்கேட்டாள்.

ஒருநாளாவது தவறாது அதேகோயிலில் அவள் முழந்தாளிட்டிருக்கிறாள். குருவானவர் திருஅப்பத்தை எழுந்தேற்றஞ்செய்கிறதை அவள் தினமும் கண்டிருக்கிறாள். அவர் எழுந்தேற்றத்துக்குரிய திவ்வியமொழிகளை உச்சரிப்பதையுங் கேட்டிருக்கிறாள். ஆனால், இன்று அவளுக்கிடையிலும், அந்தக்குருவானவருக்கிடையிலும் ஏற்பட்டஒற்றுமைபோன்ற ஒற்றுமையை அவள்ஒருகாலும் உணரவில்லை. அப்பரிசுத்த வெள்ளை அப்பத்துக்கும் அவளுக்கும் — பலியாகஒப்பிடப்பட்ட செம்மறிப் புருவைக்குப், புதியகுருவானவருக்கும், அவளுக்குமிடையிலே ஏற்பட்டசம்பந்தத்தை அவள் இதற்குமுன் ஒருகாலும்உணர்ந்ததில்லை.

அன்றையபூசை அவள் மகனின் முதற்பூசை. அவ்வேளை அவளுக்குண்டான ஆனந்தத்தை அவளுடையசிறியஇருதயத்தின் எல்லைகளால் அடக்கமுடியவில்லை. தனது மகன் பலிப்பீடத்தில் கடைசிஇராப்போசனகாட்சியைத் திரும்பவும்நடத்தியதும், கல்வாரிமலைக் காட்சியைப் புதுப்பித்ததுமே அவள்கொண்ட ஆனந்தத்தின் காரணமாக அமைந்தது. அவள்கண்களிலிருந்து பெருகிவழிந்தோடியகண்ணீர் அவளுடையதாயன்பின்சான்றாக அமைந்தது. ஆம், இன்றுஅவள் தனதுமகன் பலிப்பீடத்தில் வெள்ளைஅப்பத்தைப் பார்த்து: "இது என்சரீரம்…" என்று உச்சரித்ததைக்கேட்டாள். ஆம், உண்மையாகவே அவளுக்குக் தனதுகண்களைத் தானும் நம்பமுடியவில்லை. கண்ணீரைத்துடைத்துக்கொண்டு திரும்பவும் பார்த்தாள். அக்குருவானவர் இரட்சணியபாத்திரத்தைக் காத்திலேந்துவதைக் கண்டாள். அக்குருவானவர் அவளுடையசொந்தமகன் — அவள் தனதுஇரத்தத்தைப் பாலாகமாற்றிஊட்டிய அதேமகன். இப்போது அம்மகனை ஒன்பதுதிங்களாகத் தனதுஉதரத்தில் ஏந்தியகாரணமாகப் பெருமைகொண்டாள். தனதுமகன் படுக்கையில் வியாதியாய்க்கிடந்தபோது தனது நடுச்சாமநித்திரையை அவனுக்காக அர்ப்பணஞ்செய்ததை யிட்டுப் பெருமைகொண்டாள்— அதேமகனுக்குத்–தேவனுக்கும், தேவஅன்னைக்கும், செபமாலைக்கும் நேசங்காட்டுமாறு கற்பித்ததைநினைத்துப் பெருமைகொண்டாள். இன்று தனது மகனை ஓர் குருவாகக்காண அவள் பெருமைகொண்டாள். ஏனெனில், அவள் கடவுள் சேவைக்கு ஒப்புக்கொடுத்தது ஒரேயொருமகனையே.

அன்றுஅவள் புதியகுருவரின் கரங்களால் நன்மைவாங்கினாள்—அதேகரங்களை அவள்கழுவியிருக்கிறாள்—அதேகரங்களை அவள் திரும்பவும்திரும்பவும் முத்தம்செய்திருக்கிறாள். அதேகரங்கள் புதியகுருவரின் கரங்களென்று அவள்உணர்ந்தாள். ஏனெனில், அப்புதியகுருவர் தனதுமகன்என்று அவள் அறிந்தாள். அந்தக்கரங்களுக்கு அளிக்கப்பட்ட கடமையைநினைந்து ஆச்சரியப்பட்டாள். பாவிகளைமன்னிக்கும் வல்லமை— கடவுளுக்கு உகந்த மக்களை —மனிதரை ஆக்கும்வல்லமை — தமதுவிசாரணைக்கு அளிக்கப்பட்ட ஆத்துமாக்களை ஆக்கவோ அல்லது அழிக்கவோ வல்லமை எவ்வளவு பாரதூரமானகடமை. ஆயினும் எவ்வளவு பலவீனமான கருவிகள்! அத்திருக்கரங்களில் சாத்தப்பட்டகடமைகளை அவள் நன்குணர்ந்தாள். ஏனெனில், அந்தக்கரங்கள் அவருடையசொந்தமகனின் கரங்கள்அன்றோ!

பூசையின்பின் புதியகுரவர் தமது தாயை ஆசீர்வதித்து: "அம்மா! பதினெட்டுவருடங்களுக்குமுன் மேற்றிராசன குருமடத்து அறையில் என்னைமுத்தமிட்டுப் பிரியாவிடைகூறும்போது, என்னை உமதுமகனென்று அழைத்தீர்கள்; ஆனால், இன்றுஎன்னை 'எனதுகுரு' வென்று அழைக்கலாம்" என்றார். உடனே தனதுமகன் சின்னக் குருமடத்தை அடைந்தநாள் அவளது மனத்திரைமுன் காட்சியளித்தது. செல்வமகனின் குரலொலி அவள் மனதில் எதிரொலி செய்தது. "அம்மா! நான் உங்களைவிட்டுப் பிரிந்துபோய்க் குருமடத்தில்இருக்கும்போது நீர்துக்கப்படுவீரா? துயரம்வேண்டாம்… இன்று என்னை உமதுமகனென்று அழைக்கிறீர். ஆயினும்என்னை 'என் மகன்… என்குரு'வென்று அழைக்கக்கூடிய ஓர்சந்தர்ப்பம்கிடைக்கும்."

ஆம், தொட்டிலைஆட்டும் கரத்துக்கு எதிர்காலக்குருவானவரை ஆக்கும் கடமைஉண்டு.

---

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 27-ந்திகதி சனிக்கிழமை பி. ப. 4-15 மணிக்கு அர்ச். சூசையப்பர்சிற்றாலயத்தில் நடைபெறும். அவ்வேளை சகலசகோதரர் சகோதரிகளும் நேரகாலத்தோடு சமுகங்கொடுக்குமாறு வெகுவிநயமாய் வேண்டப்படுகிறார்கள்.

A. S. FRANCIS OF MARY,
சபைக்கர்த்தருக்காக

---

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

திருஇருதயநாதரிடமும், சதாசகாயமாதாவிடமும், கோடியற்புதரான அர்ச். அந்தோனியாரிடமும் நான்கேட்டவிண்ணப்பங்கள் இரண்டு அனுகூலமடைந்தன. நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன். இன்னோர்விண்ணப்பமும் அனுகூலமடையும்படி இவர்களை இரந்துகொள்ளுகின்றேன்.

கரவெட்டி குமார்

* * *

பாலைதீவில் கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் அர்ச். அந்தோனியாரிடம் நான்கேட்ட 2 மன்றாட்டுகள் கிடைக்கப்பெற்றேன். இன்னும் எனக்கு வேண்டியவற்றைத்தரும்படி மன்றாடி இதைப்பத்திரிகையில் பிரசுரிக்கிறேன். கோடிஅற்புதரின் நாமம் எங்கும்புகழப்படுவதாக.

நாரந்தனை ஓர்பக்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பி. சி. ஜி. (B. C. G.)

— C. Thobias (Med. Pratt.) —

சயரோகமானது 'டியுபெர்க்கில் பாசில்லஸ்' என்ற நுண்மத்தால் ஏற்படுகிறதென்ற உண்மையை இன்றையமக்கள் உணர்கின்றார்கள். இந்தநுண்மங்களை மிகுதியாகக்கொண்ட நோயுள்ளவர்களின் எச்சில் கண்ட இடமெல்லாம் உமிழப்படுவதால் நுண்மங்கள் காற்றுடன் கலந்து பலஇடங்களிலும் பரவும். அதனால் நமது அன்றாடவாழ்க்கையில் இவ்விஷநுண்மங்களை எல்லா இடங்களிலும் சுவாசத்தின்மூலம் ஏற்கவேண்டியிருக்கிறது. பாடசாலையில் பிள்ளைகளும், தொழிற்சாலையில் தொழிலாளர்களும், கார், றெயின் போன்ற வாகனங்களில் பிரயாணிகளும், இன்னும் அனைவரும் வாழ்க்கையில் நுண்மங்களைத் தங்கள் உடலில் ஏற்கச் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

நிலைமை இவ்விதம் இருந்தால் உலகில்பிறந்த எல்லா மனிதரும் சயநோயினால் வருந்தவேண்டியிருக்குமே என்ற சந்தேகம் எழலாம். சயநுண்மங்கள் உடலை அடைந்ததும் நோய்ஏற்பட வேண்டும் என்பதுஇல்லை. சிலரின் உடல் பிறப்பிலேயே நோயைஎதிர்க்கும் சக்தியை அடைந்திருக்கலாம். இன்னும்பலர் தங்கள் உடலின் ஆரோக்கியத்தாலும், நல்ல ஆகாரங்கள் உண்டு உடல்நிலையைப் பாதுகாத்துவருவதாலும் நோயைஎதிர்ப்பதற்கான சக்தியை அடைந்திருக்கலாம். இத்தகையோருக்கு இந்நோய்வராது. எனவே, நோய் நுண்மங்கள் மட்டும் அன்றி, உடல் ஆரோக்கியம் குன்றியிருப்பதும் நோய் ஏற்பட ஏதுவாகிறதென நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

## பி. சி. ஜி. யின் தத்துவம்

சயநோயை எதிர்க்கும்சக்தி நமது உடலில் இல்லாதிருக்கும்போது நுண்மங்கள் நமதுஉடலில்புகுவதால் நோய் ஏற்படுமென்றாலும், எல்லோருக்கும் நோய்ஏற்பட்டுவிடாது. நோய்நுண்மங்களின் சக்தி குறைந்திருந்தால் நமது உடல் அவற்றைஎளிதில்வென்று உடலில் நோய்க்குஎதிரான சக்தியைஉண்டு பண்ணும். இத்தகையநிலைமையை ஏற்படுத்துவதற்குத்தான் பி. சி. ஜி. ஊசி பயன்படுகின்றது. நுண்மங்களைச் செயற்கைமுறையில் மிகவும்சக்தியற்றவைகளாக ஆக்கி உடலுக்குள்செலுத்துகின்றார்கள். சக்திகுன்றிய நுண்மங்களை நமது உடல் எளிதில்வென்று எதிர்க்குஞ்சக்தியைப் பெறுக்கொள்கின்றது. இதற்குப்பின் உடலைவந்தடையும் நுண்மங்கள் ஏற்கனவே எதிர்ப்புச் சக்தி உடலில் இருக்கும் காரணத்தால் நோயைஉண்டுபண்ண முடியாது. "சிலருக்குப் பி. சி. ஜி. குத்திக்கொள்ளாமல் தானகவே அவர்களின் உடல் (முதல்தடவையாகப் புகுந்தநுண்மங்களை) வென்று எதிர்க்குஞ்சக்தியை ஏற்படுத்த முடிகின்றதே; அதேபோல எல்லோருக்கும் ஏற்படலாமே" என்று சிலர் கேட்கலாம். இது சிலர்விஷயத்தில் சரியாகஇருந்தாலும் பலருக்கு ஆபத்தாயிருக்கின்றது. உடலின் ஆரோக்கியம்குறைந்து நுண்மங்களின் சக்தி அதிகமாயிருந்தால், எதிர்க்குஞ் சக்தி உண்டாவதற்குப்பதில் சயரோகமே ஆரம்பித்துவிடும். இவ்விதஆபத்தைத் தடுப்பதற்காகவே பி. சி. ஜி. கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

பி. சி. ஜி. முறையானது நோய்வாராமல் தடுக்குமேதவிர அதைக் குணப்படுத்தாது. எனவே, நோயினல் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதனல் பிரயோசனம்இல்லை. நோயைத்தடுப்பதற்கான எதிர்க்குஞ்சக்தியை உடலில்ஏற்கனவே அடைந்தவர்களுக்கும் இது அவசியமில்லை. எதிர்க்குஞ்சக்தி உடலில் ஏற்பட்டிருக்கின்றதா, இல்லையா என்று காண்பதற்குஓர்முறை "ரியுபெர்கிளின்" சோதனை (Tuberculin Test) கையாளப்படுகின்றது. அதஎதெனில், "ரியுபெர்கிளின்" என்ற திரவத்தில் ஓர் சொட்டு நமதுமுன்கையின் (forearm) தோலுக்கடியில் சிறுஊசியினல்செலுத்தப்படுகிறது. பின்னர் மூன்றாவதுநாள் செலுத்தப்பட்ட இடம் சோதனைசெய்யப்படுகின்றது. அவ்விடம் ஓர்மாற்றமுமின்றிச் சாதாரணமாகக் காணப்பட்டால் சயநுண்மங்கள் இதுவரைஉடலில் புகவில்லைஎன்றும், நோயைஎதிர்ப்பதற்கானசக்தி உடலில்ஏற்படவில்லை என்றும் நம்பப்படும். இத்தகையோருக்குத்தான் (Tuberculin negative) பி. சி. ஜி. ஊசி அவர்களது இடதுகைத் தோள்பக்கத்தில் குத்தப்படும். ஆனல், சோதனைசெய்யப்பட்ட இடம் சிவந்து அல்லது வீக்கத்துடன்காணப்பட்டால் எப்போதாவது சயநுண்மங்கள் நமது உடலை அடைந்திருக்கின்றனஎன்றும், நாம் பி. சி. ஜி. மூலம் அடையப்போகும் அதேஎதிர்க்குஞ்சக்தியை நமது உடல்ஏற்கனவே அடைந்திருக்கின்றதென்றும் நம்பப்படும். (Tuberculin Positive) இத்தகைய உடல்நிலையைக் கண்டால் பி. சி. ஜி. குத்தமாட்டார்கள். ஏனெனில், எதிர்க்குஞ்சக்தி ஏற்கனவே உண்டுபண்ணப்பட்டிருக்கிறது.

**குறிப்பு:** சயரோகத்தால் பாதிக்கப்பட்டிருப்பவர்களின் உடலிலும் சோதனைசெய்யப்பட்ட இடம் சிவந்து அல்லது வீக்கத்தோடு காணப்படும். சயரோகம் இருக்கிறதா, இல்லையாஎன்பதை வைத்தியபரிசோதனை, எக்ஸ்றே இவற்றின்மூலம் அறிந்துகொள்ளலாம்.

சயம், குஷ்டமாகிய இவைஇரண்டும் ஒரேஇனத்தைச்சார்ந்த நுண்மங்களால் ஏற்பட்டுவருவதால் பி. சி. ஜி. குஷ்டநோயையும் தடைசெய்யும் என்று விஞ்ஞானிகளால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. பிரான்சிய வைத்தியநிபுணர்களான டக்றர் கால்மெற், டக்றர் கூயறின் என்ற இருவருந்தான் பி. சி. ஜி. முறையை ஆராய்ந்து, உடலில் செலுத்தப்படுவதற்குத் தகுதியான சக்தியற்ற சயநுண்மங்களை (Bacillus) தயாரித்தனர். எனவேதான் இவ்விருவைத்தியரதுபெயர்களின் முதல்எழுத்துக்களைச் சேர்த்து, இம்முறைக்கு B. C. G. (Bacillus of Calmette and Guerin. என்று பெயர்கொடுக்கப்பட்டிருக்கிறது.

சயரோகம் 5முதல் 20 வயதுள்ளவர்களைத்தான் கூடுதலாகப்பாதிப்பதால் சிறுவர்களுக்கு ஆரம்பத்திலேயே பி. சி. ஜி. குத்திக்கொள்ளவேண்டும். இவ்வூசியினல் உடலுக்குத் தீமைவிளைகிறதென்று சிலர்கருதுகின்றார்கள். வைத்தியவிஞ்ஞானிகள் வெகுநாள் ஆராய்ச்சி செய்து மக்கள் இதனல்மிகவும் பயன் அடைகின்றார்கள்என்ற உண்மையை உலகுக்கு உணர்த்தியிருக்கிறார்கள். தடுப்புஊசிகுத்தப்பட்ட ஒருசிலருக்கும் அபூர்வமாகச் சயம் ஏற்படுவதை வைத்துக்கொண்டு, ஊசிகுத்தியவர்களுக்கும் நோய்வருகின்றது; அதனல், இவ்வூசியால் பிரயோசனம்இல்லையென்று பறைசாற்றுகின்றனர். நோய்களுக்கு வைத்தியசிகிச்சை செய்தபின்னரும் சிலநோயாளிகள் இறக்கின்றார்கள்என்பதற்காக, நோய்களுக்குச்சிகிச்சைசெய்வதையே நிறுத்திவிடுவது போல்தான் இது இருக்கின்றது. அவர்களின் கூற்றுப்படி பெரும்பான்மையினருக்குச் சயரோகம்வாராமல் பி. சி. ஜி. ஊசி தடுப்பதால் எல்லோரும் பி. சி. ஜி. யைப் பயன்படுத்தினல் சயரோகம் நிச்சயமாகக் குறைந்துவிடும்.

— ஞானதூதன்


---

நன்றாய்ச் செலவிட்ட நாள் முடிவில் இளைப்பாறுவது இன்பம்; அதுபோல் நன்கு செலவழித்த ஜீவியத்தின்பின் மரணிப்பது இன்பந்தரும்.

— லெயோனட் டா வின்சி

---

## மரணஞாபகம்



நிகழும் சித்திரைத் திங்கள்
வியாழக்கிழமை 25-ம் நாள்
சந்தியாப்பிள்ளை யோசெவ் மரணமடைந்த
முதலாமாண்டு நிறைவு நினைவு

பிறப்பு: 10—4—1929

இறப்பு: 25—4—1956

சின்ன றோமை எனப்படும் சில்லாலை வாசரும், பலாலி விமானப் போக்குவரத்துச் சேவைப்பகுதி நிலையத்தில் "போர்மன்" ஆக உத்தியோகம் பார்த்தவரும், எனது அருமைப் பத்தாவும், எமது அருமை மகனும், எங்கள் பிரிய சகோதரனுமாகிய சந்தியாப்பிள்ளை யோசெவ் இவ்வுலகைவிட்டு மறைந்த முதலாமாண்டு நிறைவு 25-4-1957 வியாழக்கிழமை வருகின்றது. அன்று அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக நெடுந்தீவு, அர்ச். யுவானியார் கோவிலிலும், 29-ந் திகதி திங்கட்கிழமை சில்லாலை, கதிரைமாதா கோவிலிலும் துக்கப் பாடற்பூசைகள் நிறைவேறும். அவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக அத்தினங்களில் விசேஷித்தவிதமாக வேண்டிக் கொள்ளுமாறு இதைக் கண்ணுறும் சகல கிறீஸ்த விசுவாசிகளையும் தயவாகக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

| | |
|---|---|
| றாபி யோசெவ் (மனைவி) | ச. மரியாம்பிள்ளை (சகோதரன்) |
| ம. சந்தியாப்பிள்ளை (பிதா) | ச. அல்விறட் ,, |
| ச. மதலேனம்மா (மாதா) | ச. உவில்லியம் ,, |

"துரை வாசா"
மாவிலித்துறை, நெடுந்தீவு.

---

# எழில் எங்கே?

'எழில்' என்பது மூன்று எழுத்துகளால் பிறந்த ஓர்மொழியாகும். ஆயினும் இதனைக்கொண்டு எத்தனையோ எழில்களைப் பின்வருமாறு வர்ணித்துக் காட்டுகின்றார் சென்னை, லொயலாக் கல்லூரி மாணவர் திரு. கா. வேழவேந்தன் அவர்கள்.

எழில்! விழுமியதோர் அழகிய சொல். ஏற்றமும், தோற்றமும்கொண்ட வாழ்வு எழில்வாழ்வு! பொலிவும் வலிவும் கொண்டகாட்சி எழிற்காட்சி. இப்படி இன்பம்நிறை நிகழ்ச்சிகளையும், தொழில்களையும் குறிக்க வருவதே "எழில்."

ஒவ்வொருவர் கண்ணுக்கும் வெவ்வேறு உருவில் காட்சியளிக்கும் இந்த எழில். இயற்கைப் பித்துப்பிடித்த கவிஞனைநோக்கி எழில்எங்கே என்று கேட்டால் பூம்பொழிலில் என்றுகூறுவான்.

காதலன் தன்நெஞ்சம்கவர்ந்த நேரிழையாளின் கனிவானபேச்சிலேதான் எழில் மண்டிக்கிடக்கிறது என்பான்.

அன்பைக்குழைத்துத்தரும் அன்னை ஒருத்தியிடம் கேட்டால் என் குழவியின் குறுநகையில்தான் எழில்குவிந்து கிடக்கிறது என்பாள். வாட்டும் வறுமையிலே நைந்து, வாழ்வே ஒருகள்ளிக்காடுஎன்று கண்டவறியனே 'எழிலை' மரணதேவதையின் முத்தத்திலேதான் காண்கிறான். பாட்டாளியோ இந்த எழில்மங்கையின் புன்சிரிப்பைத் தன் உழைப்பிலே கண்டுகளிக்கிறான். ஈட்டியின்முன்னே தான் எழிலைக் காண்கிறேன் என்பான் "எங்கே முரசொலி" என்று காதைத் தீட்டிவைத்திருக்கும் இளவீரன். "வைரப்புதையலை வானத்திலே இறைத்துவிட்டார்களே மாபாவிகள்; அவற்றின் ஒளியெல்லாம் ஒன்றானல்...", இப்படி அண்ணாந்துபார்த்து நைந்துருகுகிறான் ஒரு அப்பாவிக்கவிஞன். "எழில்" எட்டாத தூரத்திலே இருக்கிறதாம் அவனுக்கு.

குணமுள்ளமங்கையோ கணவனின் முன்னேற்றத்திலேதான் எழிலைக்காண்கிறாள். ஆனல், ஆடம்பர வாழ்வு நடாத்தவிரும்பும் நங்கையோ தங்க நகையிலேதான் எழில்இருக்கிறது என்கிறாள். இந்தஇரு மங்கையரின் உள்ளங்களிலேயே எழில் உருமாறுகிறது. மதுவிடமும், மங்கையிடமும்தான் நான் மாபெரும்எழிலைக் காண்கிறேன்; மாந்தர்களே! மந்தபுத்தி உமக்கேன்? இன்பமும், எழிலும் இவற்றில்தான் இழைந்து கிடக்கிறது; வாருங்கள், வாருங்கள்! என்று அறைகூவுகிறான் பாரசீகக் கவிஞன் உமர்கையாம். அவர் கண்ட "எழில்" அப்படி.

"உண்மையின் வழியிலேதான் எழில் ஒளிகாட்டுகிறது" என்கிறார் காந்தியடிகள். அவர்வாழ்வு எழில் வாழ்வு, ஏற்றம்பெற்றவாழ்வு என்று சொல்லாமல் சொல்லுகிறது மாநிலம்.

"பாவையரின் பாகுமொழியிலேதான் எழில்என்பது இல்லை; பகைவரின் செங்குருதியிலேதான் நான் எழிற்காட்சி காண்கிறேன்; இந்த எழிலைக் காணஎன்வாழ்நாளில் என்றுமே தயங்கமாட்டேன்" என்கிறான் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். அவன் எழிற்பண்பை நினைத்து இறும்பூது எய்துகிறோம் நாம்.

இளங்கோவும் எழிற்காட்சி கண்டான். ஆனல் எங்கே? பாவலர்கள் பாடிவர, அமைச்சர்குழாம் கூடிவர, அழகியர்கள் ஆடிவர, அனைவர்களும் தேடிவர அரியணையில் கொலுவிருக்கும் அரசபதவியிலா? அல்ல. தனிமையிலே, தமிழ்த்தாயின் இனிமையிலே எழில்கண்டான். இறவாப் புகழ்பெற்ற "துற"விலே எழில்கண்டான். அவன் இதயஎழில்கண்டு இன்றும் மலைத்துநிற்கிறது ஞானிலம்.

தோன்றும் வெண்ணிலவு குமுதத்திற்கு எழில். செங்கதிரோன் உதயம் செந்தாமரைக்கு எழில். மாலைக்கு எழில் மயக்கும்தென்றல். சோலைக்கு எழில் சுந்தரமலர்கள். வாவிக்கு எழில் வளமுடை கயல்கள். அறிவுக்குஎழில் ஆழ்ந்தசிந்தனை. உயர்வுக்கு எழில் அயர்வற்ற உழைப்பு.

காவியம் புனையும் கவிஞனுக்கு அரியதோர் தூண்டுகோலாகிறது கற்பனை எழில். ஓவியப்வரையும் கலைஞனுக்கு வண்ணத்தூரிகையின் முனையாக அமைகிறது இயற்கையின் எழில்.

சிற்பியின் சிந்தனையைப் பெருக்கிச் சிங்காரத் திருவுருவங்கள் சமைக்கத் தினம்தினம் உதவுகிறது தெவிட்டாத இயற்கைஎழில்.

இந்த ஏற்றமிக்க "எழி"லைத் தம் வாழ்விலேகாண எத்தனையோ இதயங்கள் ஏங்கித்தவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசித்திருநாள்—பாத்திமாகிரி

## பண்டத்தெருப்பு

பண்டத்தெருப்பு, பாத்திமாகிரியில் கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் மாசற்றஇருதயநாயகியின் திருஸ்தலத்திலே பாத்திமாவில் தேவஅன்னை முதல்தரிசனையளித்ததினம் அடுத்தவைகாசிமாதம் 12-ந்திகதி ஞாயிறுமாலை 7 மணிதொடக்கம் கொண்டாடப்படும்.


### நிகழ்ச்சிநிரல்

மாலை: 7-00 திவ்வியசற்பிரசாதம் எழுந்தேற்றம் செய்யப்படுதல்.
7-15 முதலாவது செபமாலை (காணிக்க விளக்கத்துடன்)
8-15 இரண்டாவது செபமாலை (காணிக்க விளக்கத்துடன்)
9-15 மூன்றாவது செபமாலை (காணிக்க விளக்கத்துடன்)
10-15—11-00 இடைவேளை
11-00—12-00 திருமணித்தியாலமும், சற்பிரசாதஆசீர்வாதமும்.
12-00 திவ்வியபூசை

6-ந்திகதிதொடக்கம் தினமும் பிற்பகல் 6-30மணிக்கு மாலைஆராதனையும், பிரசங்கமும் நடைபெறும்.

பாத்திமாகிரி
24-4-57.

P. T. ஜேம்ஸ், O. M. I.
கட்டளைக்குரவர்




# நாடு சங்கதிகள்

● சமீபத்திலே நரைமயிர்கொண்ட 60 வயதுடைய ஓர்பெண் பேர்ச்ரெஸ்காடன் எனுமிடத்திலுள்ள போசனசாலையொன்றில் ஓர் சமையற்காரியாக அமரலாயினள். இவளுடைய நாமம் பவுலா வுல்வ் என்பது. இவள் யார்? ஜேர்மனியின் நாஸிய சர்வாதிகாரியாயிருந்து அதோகதிக்குள்ளான ஹிற்லரின் சகோதரி. இவள் தனதுபெயரை ஹிற்லர்என்று மாற்றியமைக்கத் திட்டஞ்செய்துவருகின்றுளாம்.

● சென்னைஇராச்சிய புதியமந்திரிசபை எட்டுமந்திரிமாரை அடக்கியுள்ளது. இவர்களில் ஸ்ரீமதி லூர்தம்மாள் எனும்கத்தோலிக்கபெண்பணியும் ஒருவராவர். இவர் கன்னியாகுமரிப்பகுதியைச்சேர்ந்த கொலாச்செல்தொகுதிப் பிரதிநிதியாகச் சென்னை இராச்சிய சட்டசபைக்குச் சென்றமாதம் தெரியப்பெற்றிருந்தார். இவரே இந்தியாவின் முதலாவது கத்தோலிக்க பெண மந்திரியாவர். கொலாச்செல் தொகுதி 7,000 கத்தோலிக்கரை அடக்கியதாகும்.

● பிரான்சின் முன்னைநாள் ஜனதிபதியும், அத்தேச அரசியலில் வேதவிரோதிகளான இடதுசாரிகளின் தலைவராயிருந்தவருமான எம். எடுவாட் ஹெறியோ எனபவர் பிரான்சியபெரிய இராசதந்திரியும், தேசாபிமானியுமாவர். ஆனுல், இவர் சமீபத்திலே தமது அந்தியவேளை மனந்திரும்பி ஓர் கத்தோலிக்கராக மரணமடையலாயினர். அவர் கேட்டுக்கொண்டபடியே அவருக்குச் சமயாசாரப்படி பிரேதஅடக்கம் நடைபெறலாயிற்று. அதனுல் அவரதுகட்சியினரான வேதவிரோதிகளுக்கெல்லாம் பெரும்விழுகையாயிற்று.

● எகிப்து-இஸ்ருயேல் எல்லையில் நிறுத்தப்பட்டுள்ள இந்தியபடைவீரர்களுக்குச் சுரங்கக்கண்ணிகளால் பேராபத்தஏற்பட்டுள்ளது. இச்சுரங்கங்கள் இதுவரை நானூறுவரையிலே கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. எல்லையிலே ஆங்காங்கு பவுண்டன்பேனை, ஊதுகுழல்போன்ற குண்டுகள் ஏராளமாகக் கிடக்கின்றன. இந்தஊதுகுழலை யாராவது எடுத்துஊதினுல், அல்லது பேனையைத்திறந்தால் அவைகள்உடனே வெடித்துவிடுகின்றன.

● பிறேசில்நாட்டிலே சென்றஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஓர்ஆகாய விமான விபத்தில் பிரயாணிகள் 35 பேரும், விமானிகள் 5பேருமாக 40 பேர்உயிர்துறந்தார்கள். உலகில் மகாப்பெரிய விமானவிபத்து நடைபெற்றது 1953-ம்ஆண்டு ஆனிமாதம் 18-ந்திகதியாகும். அப்போது 129அமெரிக்க போர்வீரர்களைக் கோறியாவுக்கு ஏற்றிச்சென்ற ஓர் அமெரிக்கவிமானம் ஜப்பானில் விபத்துக்குள்ளானபோது அத்தனைபேரும் உயிர்மாண்டார்கள்.

● சமீபத்திலே பொதுச்சன அபிப்பிராயங்கேட்டுச் சம்மதவாக்குக் கேட்கப்பட்டபோது சுதந்திர மேற்குஜேர்மனியில் வசிப்பவர்களில் ஏறக்குறைய மூன்றில்ஒருபங்குபேர் அங்கு முடியாசைத் திரும்பவும் ஸ்தாபிக்கவேண்டுமென்பதற்குச் சார்பாகச் சம்மதிதெரிவித்துக் கொண்டார்கள். தற்போது 49 வயதுடையவரான லூயிஸ் பேர்டினன்ட் இளவரசரே கெய்சரினிடமாக ஜேர்மன் சிம்மாசனத்துக்கு உரிமை பாராட்டிவருகின்றுர். இவர் 1918-ம் ஆண்டு சிம்மாசனத்தைத்துறந்த2-வது வில்லியம் கெய்ஸரின் பௌத்திராவர்.

# கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 39

உரும்பராய் கிழக்கு
வீரசிங்கம் சத்தியானந்தம்
—வழக்காளி.

எதிராக

யாழ்ப்பாணம், சிவியாதெரு மேற்கு
1. தம்பையா செல்லப்பா கைம்பெண் அன்னப்பிள்ளை அல்லது அன்னபூரணமும்,
2. செல்லப்பா அருளானந்தமும்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம், டிஸ்திறிக்கோட்டின் M. B 39-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல்விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1957-ம்ஆண்டு ஆனிமாதம் 4-ந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

### காணிவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் சுண்டிக்குளிக் கோயிற்பற்றுச் சிவியாதெருஇறை நறுவிலியடி மறுபிரிவும், நறுவிலியடி வளவும் பி. நி. இலா. 16. இதில் மேற்குப்பக்கமாகப் பர. நில. இலா. 6. மிகுதிக்காணி 10 பரப்பும் கிழக்குப் பக்கத்தில் சீதனங்கொடுக்கப்பட்டது மேலும், மொத்தமான பரப்பு 36 5/8-இல் வடக்குப்பக்கமாக நிந்தமாகஉடையது 16 பரப்பு; இருந்தும் அந்தச்சொல்லப்பட்ட 36 5/8 பரப்பு எடபடிப்பட்டதென்றல் ஒன்று $10\frac{1}{2}$, மற்றது 16 பரப்பு; மற்றது 10 1/8. ஆனுல், சொல்லப்பட்ட 6 பரப்பு, பயிர் வகைகளும், கிணற்றுப்பங்கும். எல்லை: கிழக்கு— நாகலிங்கம் இராசுவுக்கும், பெண்சாதிக்குமுரிய ஆதனங்கள். வடக்கு— கொழும்புத்துறைத் தெண்டபாணிக் கோவிலுக்குரிய ஆதனமும், ரேட்டும். அதாவது, ரேட்டு. முன்பு ஒழுங்கையாயிருந்தது. மேற்கு— சதாசிவம் பெண் பொன்னுவிஞதனமும், மறுபேரும். தெற்கு— சின்னவன் நாகமுத்தனின் மிகுதியானஆதனமும், மறுபேரும்.

இந்தக்காணி D 226/385-ம் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கின்றது.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.


24 சப்பல்வீதி,
யாழ்ப்பாணம்.
23-4-57

# ஒரு நூதனம் அன்று

ஐக்கியஅமெரிக்கதேச பட்டாள அதிகாரிஒருவர் சீனுவில் குஷ்டரோகர்சாலைஒன்றுக்கு விஜயஞ்செய்தார். அங்கே ஓர் கன்னியாஸ்திரி ஓர்குஷ்டரோகியின் புண்ணைக்கழுவித் துடைக்கிறதைக்கண்டு, "சிஸ்றர்! இது என்ன ஓர் அவலட்சணமும், அரோசிகமுமான வேலைசெய்கிறீர்? நானென்றுல் 1,000பவுண் தந்தாலும் இந்தவேலையைச்செய்யமாட்டேன்" என்றுர். அதற்குச் சிஸ்றர், நானே 10,000பவுண்தந்தாலும் இந்தவேலையைச் செய்யமாட்டேன்; ஆனுல், இவருக்காக (தன்கையிலிருந்த செபமாலைக் குருசை எடுத்துக்காட்டி) "இவருக்காக எதையுஞ்செய்ய ஆயத்தமாயிருக்கிறேன" என்றுர்.

புத்தகுருவைப் பராமரித்த கன்னியாஸ்திரியின் தியாகசேவையைப்பற்றி வெகுநூதனமாக எல்லோரும் எடுத்துப்பேசுகிறுர்கள். இத்தகையசம்பவம் கன்னியாஸ்திரிகள்பணியாற்றுகின்ற எல்லா வைத்தியசாலைகளிலும் சாதாரணமாய் நடைபெறுவதே.

### 3-ம் வருட மரணஞாபகம்



பிறப்பு: 24—6—36
இறப்பு: 21—4—54

எங்கள் அருமை மகனும், நேசச்சகோதரருமாகிய ஜெயநாதன் ஜேம்ஸ் மரணமான 3-ம் வருடம் 21-4-57-இல் பூர்த்தியானது. இவர் ஆத்தும இளைப்பாற்றிக்காக விசேஷவிதமாய் வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பெற்றோர்—சகோதரர்—இனசனர்

### அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்



சென் வின்சென்றடி போல் தருமசபை யாழ்ப்பாணம்

கேட்டநன்மைகள் அனுகூலமானதினுல் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

அப்புத்தளை: எஸ். எம். யோசேப்பு 15-00 — நெடுந்தீவு: எஸ். சீமான் 49-00 — தலவாக்கொல்லை: ஓர்உபகாரி 105-00 — சிங்கப்பூர்: எம். ஏ. பெஞ்சமின் 20-00 — சில்லாலை: ரி. இரத்தினசாமி 13-00 — பண்டத்தரிப்பு: மிஸ் அந்தோனிப்பிள்ளை 19-00 — உடப்புவா: ரி. ஈ. மிருல் 7-00, ஏ. பிறிற்றே 4-00 — நீர்கொழும்பு: ஓ. எக்ஸ். பெர்ணுண்டோ 10-00 — லிண்டுலா: எம். பி. போல் 9-00 — சூராவத்தை: எஸ். ஆசீர்வாதம் 5-75, எஸ். சின்னத்தங்கம் 8-00 — மிரிசுவில்: என். அக்னேஸ் மனோன்மணி 2-00 — கல்கமுவா: எஸ். மரியாம்பிள்ளை 1-50, ஜெற்றாட் தோமஸ் 2-00, பி. நீக்லஸ் 3-00, பி. சந்தியாப்பிள்ளை 9-00 — கற்பிட்டி: எஸ். வி. நோனீஸ் 4-50 — மஸ்கேலியா: எம். செபஸ்தியம்மாள் 4-00 — உடப்புசலாவை: ஏ. எஸ். பீற்றர் 3-00 — நீர்கொழும்பு: ஏ. என். வில்லவராயர் 11-00 — வட்டகொடை: எம். ஐ. ஜே. தம்பி 3-00 — முள்ளியவளை: எம். இம்மானுவேல் 2-50 — கொழும்பு: டி. எம். மேரி 3-00, ஜி. அந்திரேஸ் 6-00, சூசை லூயிஸ் 3-00 — கம்பளை: மிசெஸ் ஏ. டி. சேவியர் 2-00 — பண்டாரவளை: மிசெஸ் பீற்றர் 2-00 — முள்ளிக்குளம்: மிசெஸ் பிரான்சிஸ் மேரி 5-00, மிசெஸ் பிரான்சிஸ்குருஸ் 2-00 — முருங்கன்: எம். ஞானப்பிரகாசம் 2-00, எஸ். லுக்கேஸ் லெம்பேட் 2-00 — குருணுகல்: ஜி. எஸ். சின்னத்துரை 2-00 — டங்கொட்டுவா: வி. தோமஸ் தமல் 2-00, மேரி மெற்றில்டா கோமஸ் 10-00 — எட்டியாநதோட்டை: எம். ஆர். எஸ். சிங்கராசா 2-00 — முருங்கன்: மரியரேசா பீரிஸ் 5-00 — யாழ்ப்பாணம்: பி. சி. பொன்னையா 5-00 எம். கஸ்பாறு 2-00, ஜே. பனுவேற்பிள்ளை 1-00 — கொஸ்லான்ட்: எஸ். கே. எம். பிள்ளை 10-00 — செட்டிகுளம்: ஜே. இராயப்பு 5-00 — மலாயா: ஏ. சவிரிமுத்து 50-00, வி. எஸ். அந்தோனிப்பிள்ளை 6-00 — முல்லைத்தீவு: எஸ். எம். இளையதம்பி 2-00, ஏ. அன்னம்மா 2-00 — நாவற்குளி: ரி. வில்லியம் 2-00 — திரிகோணமலை: தோமஸ் மோசேஸ் 2-00 — கொற்றன்தீவு: ஆர். எஸ். பி. எஸ். பிள்ளை 2-00 — டிக்கோயா: எம். வஸ்தியாம்பிள்ளை 5-00 — இற்றுலை: பிருங் அன்ரன் 2-00.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, April 25-1957.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org